

Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 089 | செவ்வாய்க்கிழமை | மாசி 11 ஆம் நாள் 23 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# யாழ். மருத்துவ நிபுணருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## தடுப்பூசியையும் தகர்த்து ஊடுருவியது வைரஸ்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரபல நரம்பியல் மருத்துவ நிபுணர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இவர் அண்மையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றியிருந்தபோதும், அவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 19

## பல நாடுகள் நேசக்கரம்

### மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, பெப்.23

ஜெனிவா விவகாரம் இலங்கைக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது. பல நாடுகள் இம்முறை இலங்கைக்கு ஆதரவு வழங்கும் 19

## தமிழ் கட்சிகளின் துரோகம் பலிக்கப் போவதே இல்லை!

### கோத்தாபய கூறுகின்றார்

கொழும்பு, பெப்.23

ஜெனிவாவில் இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் துரோக நடவடிக்கைகளில் தமிழ்க் கட்சியினர் உள்ளிட்ட எதிரணியினர் மும்முரமாக 19

## ஐ.நாவில் புதிய தீர்மானம்

### பிரிட்டன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காகபுதிய தீர்மானத்தை முன்வைப்போம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை 19

## அடுத்தகட்ட நடவடிக்கைக்கு போதனாவில் சிறப்புக் குழு!

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவ வல்லுநர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, மருத்துவமனையில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் 19

## மேலதிக நடவடிக்கைக்காக வகைப்படுத்தல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நரம்பியல் நிபுணர் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை வகைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நேற்றிரவு அறியமுடிந்தது.

மருத்துவ நிபுணருடன் தொடர்புகளைப் பேணிய அடிப்படையில் இவர்கள் வகைப்படுத்தப் படுவார்கள் என்றும், அதன் அடிப்படை 19

## சிறுபான்மையினரின் உரிமைகள் ஒடுக்கப்படுவதை ஏற்க முடியாது!

### ஐ.நா. செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டு



ஜெனிவா, பெப்.23

உலகளாவிய ரீதியில் சிறுபான்மை சமூகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. அதேநேரம் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி உலக நாடுகளின் சில அரசாங்கங்கள் அடிப்படைச் சுதந்திரத்தை குற்றமாகப் பிரகடனப்படுத்துவதற்கும், சுயாதீன செய்தி அறிக்கையிடலைத் தடை செய் 18

## ஐ.நா. மனித உரிமை சபையை கடாச வேண்டுமாம் இலங்கை!

### அமெரிக்காவோடு ஒப்பிடுகிறார் சாகர தேரர்!!

கொழும்பு, பெப்.23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்று கோரியுள்ளார் இலங்கைக்கான சர்வதேச மக்கள் 19

## மகனைத் தேடிய தாய் ஏமாற்றத்தோடு சாவு!



வவுனியா, பெப்.23

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் நேற்று சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா, மறவன்குளத்தைச் சேர்ந்த த.பேரின்பநாயகி (வயது61) என்பவரே உயிரிழந்துள்ளார். இவரது மகன் 2000ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டார். அன்றுமுதல் தனது மகனைத் தேடி வந்தார் பேரின்பநாயகி. 04

## ஆசிரியைக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப்.23

வடக்கு மாகாணத்தில் நேற்று பூநகரியில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப் 19

## வடக்கிலுள்ள தீவுகளை விற்கும் திட்டமில்லையாம்!

### கரணமடிக்கிறார் அமைச்சர் டலஸ்

கொழும்பு, பெப்.23

வடக்கிலுள்ள எந்தவொரு தீவும் வெளிநாட்டுக்கு விற்பனை செய்யப்படமாட்டாது என்று மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித் 19

## கைதிக்கு கொரோனா: பொலிஸாருக்கு தனிமை

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் சிறைச்சாலை விளக்கமறியல் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்றுக் கண்டறியப் பட்டுள்ள நிலையில், மானிப் 04

# 5 எம்.பி.க்கள் அரச அடிமைகள்

**போட்டுத்தாக்குகின்றார் கஜேந்திரன் எம்.பி.**

வவுனியா, பெப். 23

நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், டக்ளஸ், திலீபன், வியாழேந்திரன் மற்றும் பிள்ளையான் ஆகியோர் அரசாங்கத்தின் முகவர்களாகவும் அடிமைகளாகவும் உள்ளனர் என்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கிறோம். இது எமது நீதிக்கான போராட்டம். இலங்கையில் இருக்கும் கட்டமைப்புகளால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான நீதி கிடைக்காது என்பது நிரூபனமான வகையிலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றை நோக்கி நாங்கள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேசத்தை நோக்கிச் செல்லும்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நேர்மையாகச் செயற்படவேண்டும். சரியான நிலைப்பாட்டில் சர்வதேசச் சமூகத்தை நோக்கிச் செயற்பட்டால் இந்த பூகோளப் போட்டியை எங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ள முடியும். அதில் நம்பிக்கை இருக்கிறது என்றார். (ம-110)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை புலிகளை தியாகிகளாக்குகிறதாம்

*பிரிட்டன் கொன்சவேட்டிவ் கட்சி உறுப்பினர் போர்க்கொடி*

**யாழ்ப்பாணம்,பெப்.23**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் தொனி விடுதலைப்புலிகளுக்கு தியாகிகள் அந்தஸ்தை பெற்றுக்கொடுக்கும் விதத்தில் காணப்படுகின்றது என்று பிரிட்டன் கொன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த நேஸ் பிரபு தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இலங்கையில் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு உதவக்கூடிய விடயம் எதுவுமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனவரி 2009 முதல் மே 2009 வரை 5 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் வரையிலான பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்பதற்கான சுயாதீனமாக நிரூபிக்கப்பட்ட பல ஆதாரங்கள் உள்ளன என்பது உட்பட பல முக்கிய விடயங்களை மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை புறக்கணித்துவிட்டது ஐக்கியநாடுகள் முன்வைக்கும் கட்டுக்கதை போல 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.மோதலில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களில் 60 வீதமானவர்கள் சிறுவர்கள் எனவும் யுனிசெப் தெரிவித்துள்ளது . சிறுவர்களை படையணியில் இணைப்பது, பயிற்சி வழங்குவது உட்பட பல நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் பிரிட்டனில் வாழும் அடேல் பாலசிங்கம். பிரிட்டன் இந்த விவகாரத்தை விசாரணை செய்யுமாறு ஐநாவை கேட்கத்தவறியது ஏன்? என்பது தெரியவில்லை - என்றார். (ஐ-இ)

## க.பொ.த. சா/த பரீட்சை
# அனுமதி அட்டையில் திருத்தம் மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,பெப்.23

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையில் பெயர் மாற்றம், பாட மாற்றம், மொழி மாற்றம் மற்றும் பாடத்தை புதிதாகச் சேர்த்தல் தொடர்பான திருத்தங்கள் இருப்பின் அவற்றை நாளை 24 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்தின் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தள முகவரி ஊடாக மேற்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.(ஐ)

# உலகத் தமிழ் மொழி தினம் கிளிநொச்சியில் கோலாகலம்

கிளிநொச்சி, பெப். 23

உலகத் தமிழ் மொழி தினம், கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றிய கருத்துரைகள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் தமிழ்ச்சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளையின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் அருந்தவராணி கலந்து கொண்டு தமிழ்மொழியின் தொன்மை தொடர்பிலும், தமிழ்மொழியின் இலக்கிய, இலக்கணச் சிறப்புகள் தொடர்பிலும் தூய மொழிப் பிரயோகம் தொடர்பில் அடுத்த தலைமுறையினருக்கு தெரியப்படுத்துவது தொடர்பிலும் உரையாற்றினார். (ப-12)



# தமிழ் மன்னர்களின் பெயரில் கணேசபுரம் கிராம வீதிகள்

**கிராம அலுவலர் முன்னுதாரணம்**

வவுனியா, பெப்.23

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மரக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவு கணேசபுரம் கிராமத்தின் வீதிகளுக்கு தமிழ் மன்னர்கள் மற்றும் தமிழ் பெரியார்களின் பெயரை வைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மரக்காரம்பளை கிராம அலுவலர் நா.ஸ்ரீதரனின் எண்ணக்கருவில் கணேசபுரம் கிராமத்தின் வீதிகளுக்கு புதிதாக தமிழ் மன்னர்கள் மற்றும் தமிழ் பெரியார்களின் பெயர்களை வைக்கும் திட்டம் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு கணேசபுரம் முதலாம் ஒழுங்கை தொடக்கம் 12ஆம் ஒழுங்கை வரை அமைக்கப்பட்ட வீதிகள் அவற்றின் ஒழுங்கைகளுக்கு தமிழ் மன்னர்கள் மற்றும் தமிழ் பெரியார்கள் என பல்வேறு பெயர்கள் முன்மொழியப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இப்பெயர்களை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் அனுமதியுடனும் பிரதேச செயலக ஒத்துழைப்புடனும் சட்டரீதியாக பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வீதிகளுக்கு இப்பெயர் பலகைகளை நிர்மாணிக்க மக்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.

கிராம அலுவலரின் இந்த நடவடிக்கை தமிழர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் கிராம அலுவலருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கும் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். (ப-18)

# புதிய பேருந்து நிலையத்தில் சேவைகளை தொடரத் தயார்

*யாழ். தூர சேவைப் பேருந்து உரிமையாளர்கள் கம்பனி மீண்டும் உறுதி*

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். மாவட்ட தூரசேவைக்கான பேருந்து தரிப்பிடத்தில் இருந்து சேவைகளைத் தொடர்வதற்கு தயாராகவே உள்ளோம் என்று யாழ். மாவட்ட தூர சேவைப் பேருந்து உரிமையாளர்கள் கம்பனி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் அவர்கள் யாழ்ப்பாண மாநகர முதல்வருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த காலங்களில் தூரசேவைகளை மேற்கொள்ளும் இ.போ.ச. பேருந்துக்களும் தனியார் பேருந்துக்களும், வெவ்வேறு தரிப்பிடங்களில் இருந்து. சேவைகளை ஆரம்பித்து சரியான நேர சூசிகைகளுக்கு அமைவாக சேவைகளில் ஈடுபட்டதால், போட்டி போட்டு ஓடுதல், வீதி விதிகளை மீறிச் சேவையில் ஈடுபடுதல், பொலிஸ் நிலையங்களில் பயணிகளுடன் பேருந்துக்களை தடுத்துவைத்தல் மற்றும் பயணிகள், நோயாளர்கள் அவதியுறும் நிலை என பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற சேவைகளை ஆற்றுகின்றனர் என்பதை பயணிகளின் நாளாந்த முறைப்பாடுகளில் இருந்து அறிய முடிகின்றது.

இத் துன்பியல் நிகழ்வு இனியும் தொடரக் கூடாது என்பதற்காகவே எமது போக்குவரத்து சங்கப் பிரதிநிதிகள் தங்களுடன் கலந்துரையாடி எமது நிலையைத் தங்களுக்கு விரிவாக எடுத்துரைத்துள்ளோம். எமது தனியார் பேருந்து உரிமையாளர்கள் தாங்கள் அறிவித்துள்ள நடைமுறையை நடைமுறைப்படுத்த தயாராகவே உள்ளனர் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். இ.போ.சபையினர் தங்களின் அறிவித்தலை ஏற்றுக் கொள்வார்களேயானால் ஏற்கனவே தங்களுக்கு நாங்கள் அறிவித்தது போல் தனியார் பேருந்துக்கள் புதிய தரிப்பு நிலையத்தில் இருந்து பயணிகள் விரும்பும் பாதுகாப்பான சேவைகளை ஆற்றும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ப)

சமுர்த்திப் பயனாளிகளுக்கான வீட்டுத்திட்டம்

# பயனாளிகள் தெரிவில் முறைகேடு; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**மன்னார், பெப்.23**

**மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட எம். யூ.எல்.9. பாண்டியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீட்டுத்திட்டத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

குறித்த பிரிவில், சமுர்த்தித் திட்டத்தின் கீழ் பயனாளிகள் ஐவருக்கு தலா இரண்டு லட்சம் ரூபா வீதம் தற்காலிக வீடு அமைப்பதற்கான நிதியுதவி கடந்தமாதம் வழங்கப்பட்டது. இதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவர் ஏற்கனவே அரச வீட்டுத் திட்டத்தைப் பெற்றவர் என்றும் அவரது சகோதரி அங்கு சமுர்த்தி உத்தியோகத்தராக உள்ளமையால் இந்தத் தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளது. எனவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு பொருண்மியம் நலிந்த நிலையில் பல பயனாளிகளின் குடும்பங்கள் உள்ளன எனவும், அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான உதவிகளில் புறக்கணிக் கப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பாண்டியன்குளம் கிராம அலுவலரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்த நிதியானது சமுர்த்தி உதவிபெறும் பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. பாண்டியன்குளம் கிராமசேவையாளர் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தரே பயனாளிகளைத் தெரிவு செய்தார். இது தொடர்பில் அவரைக் கேட்ட போது. முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் தனது தாயாரின் பெயர் விவரத்தையும் இணைத்து அனுப்பினார் எனவும், அவரை உதவித்திட்டத்திலிருந்து விலக்கினாலும் வேறு ஒருவர் அதைப் பெற சந்தர்ப்பமில்லை எனவும் அவர் தன்னிடம் தெரி வித்தார் என்றார். இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-12)



## மரக்கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி,பெப்.23

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு நாவல் நகர் பகுதியில் இடம்பெற்ற சட்ட விரோத மரக்கடத்தல் முறியடிக்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட. பொலிஸ் அத்தியட்சகர் அசங்க பண்டார குணத்திலக்கவின், மது ஒழிப்புப் பொலிஸ் அணியினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து நேற்று அதிகாலை, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மரக் கடத்தலை முறியடித்தனர்.

பல மணி நேரத் தேடுதலின் பின்னர் உழவு இயந்திரத்தில் பாலை மரக்குற்றிகள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டார். மரக்கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும், 21 பாலைமரக்குற்றிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (க-113)

## இயக்குநர் சபை தெரிவு

வவுனியா, பெப்.23

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் 2021-2023 ஆம் ஆண்டுக்கான இயக்குநர் சபைத் தெரிவு நேற்று முன்தினம் அமைப்பின் அலுவலகத்தில் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் கி.வசந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவர் தெரிவில் தற்போதைய தலைவரான எஸ்.சந்திரகுமார் தெரிவாகியதுடன் செயலாளராக திருமதி ப. சோதிமலர், பொருளாளராக திருமதி தனராணி, உப தலைவராக தா.சலசலோசன் மற்றும் உப செயலாளராக வே.இராமச்சந்திரன் ஆகியோர் சபையால் தெரிவு செய்யப்பட்டனர். (ச)



வவுனியா நகரில்

## வீதியோர வியாபாரத்துக்குத் தடை; பறிமுதல் செய்யப்பட்டன மரக்கறிகள்


வவுனியா,பெப்.23

தடையுத்தரவை மீறி வீதியோர வியாபாரத்தில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக நேற்று வவுனியா நகரசபையால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனாத் தொற்று காரணமாக வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்கு நகரசபையால் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று நகரப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது வீதியோரத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நபர்களின் மரக்கறிகள் மற்றும் பொருள்களை நகரசபையினர் ஏற்றிச்சென்றதுடன் அவர்களுக்கு தண்டப்பணமும் விதித்தனர். நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிலர் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நகரசபை வாகனத்தின் மீது மரக்கறிகளை எறிந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். (ஜ-18)





# சட்டப் பாதுகாப்பு விழிப்புணர்வு; பொலிஸார் வழங்க வேண்டும்!

முல்லை. பெண்கள் அமைப்பு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.23

பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பாக பொலிஸார் விளக்கமளிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு சிவில் சமூகப் பெண்கள் அமைப்பு பொலிஸ் நிலையத்தில் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.

சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, மக்கள் மத்தியில் குறைந்து காணப்படுகின்றது. சமூகத்தில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள் தொடர்பில் சமூக அமைப்புகள் எவ்வாறு செயற்படவேண்டும் மற்றும் பொலிஸாருக்கு பொதுமக்கள் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கலாம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு விளக்கங்களைப் பொதுமக்கள் மத்தியில் பொலிஸார் வழங்குகின்றமை சமூகத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதைவிட சமூக வன்முறைகள், குடும்ப வன்முறைகள் குறிப்பாக பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக பொலிஸார் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண் டும். சட்டவிரோத மதுபான உற்பத்தி உட்பட சமூகச் சீர்கேடுகள் தொடர்பான சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, பொதுமக்கள் மத்தியில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இவை தொடர்பாக பொலிஸார் மக்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி முல்லைத்தீவு சிவில் சமூகப் பெண்கள் அமைப்பு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது. (ற-13)

# முல்லைத்தீவில் தொடர்கிறது யானைகளின் அட்டகாசம்!

முல்லைத்தீவு,பெப்.23

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் பொதுமக்கள் மற்றும் தோட்டச் செய்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தோட்டங்களுக்குள் புகுந்த நான்கு காட்டு யானைகள்,50 க்கு மேற்பட்ட தென்னைகளை அழித்துள்ளன. அத்துடன் வேலியில் போடப்பட்டிருந்த தூண்கள் பலவற்றைப் பிடுங்கி எறிந்ததுடன், விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தும் உழவு இயந்திரம் ஒன்றும் யானைகளால் சேதமாக்கப்பட்டது. இதனை அடுத்து யானையை விரட்டும் செயற்பாட்டில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்ட போதும், யானைகள் பற்றைக் காட்டில் மறைந்திருந்து மக்களுக்கு அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த, யானை வேலி அமைத்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-19)

# குருந்தூரில் தமிழர் வாழ்ந்தமைக்கு சிங்கள இலக்கியங்களில் ஆதாரம்!

## பேராசிரியர் புஸ்பரட்ணம் தகவல்

**யாழ்ப்பாணம்,பெப்.23**

**குருந்தலூரில் ( குருந்தூர்) 13ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு பாலி சிங்கள இலக்கியங்களில் ஆதாரம் உண்டு என்று யாழ்.பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னிப் பிரதேசத்தில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த முக்கிய வரலாற்று மையங்களில் குருந்தலூரும் ( குருந்தூர்) ஒன்றாகும். பாலி இலக்கியங்களில் இந்த இடம் குருந்தகம என்றும், தமிழில் இது குருந்தலூர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. குருந்தலூரில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர், குருந்தலூர் (குருந்தூர்) அதன் சுற்றாடலிலும் ஆதி இரும்பு காலத்து பெருங்கற்கால பண்பாடு இருந்துள்ளது.

ஆகவே அந்தப் பண்பாட்டு மக்களில் ஒரு பிரிவினர் பௌத்த மதம் பரவியபோது, அந்த மதத்தையும் தழுவியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை குருந்தலூர் ( குருந்தூர்) 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் சாகவனுடைய ஆட்சியில் மிக முக்கிய ஒரு நகராக இருந்ததை சூலவம்சமும், இராஜாவெலிய என்ற சிங்கள இலக்கியமும் குறிப்பிடுகின்றன. இந்த இடத்தில் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆய்வு மேற்கொண்ட லூயிஸ் தமது, வன்னிக் கையேடு என்ற நூலில் தான் அந்த இடத்துக்குச் சென்ற போது அங்கு பௌத்த கட்டட எச்சங்களோடு இந்து ஆலயத்தின் எச்சங்களையும் கண்டேன் என்று குறிப்பிடுகிறார். நந்தியோடு உடைந்த நந்தியும், அதனோடு இணைந்த கட்டட அழிபாடுகளையும் தான் கண்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

1870 ஆம் ஆண்டு போல் என்பவர், தான் இந்த இடத்துக்குச் சென்ற போது பௌத்த கட்டட எச்சங்களுடன் தமிழ்க் கல்வெட்டுடன் கூடிய இந்து ஆலயங்களின் அழிபாடுகளைக் கண்டேன் என்று குறிப்பிடுகிறார். ஆகவே குருந்தலூர் ( குருந்தூர்) பகுதிகள் பௌத்த இந்து ஆலயங்கள் தோன்றி வளர்ந்த இடங்களாகக் காணப்படுகின்றன. குருந்தலூருக்கு அண்மையிலுள்ள பெரியகுளம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளில், தமிழ் வணிகனான விசாகன் பௌத்த துறவிகளுக்கு புகை கற்படுக்கைகள் கொடுத்தது பற்றி கூறுகின்றது. வன்னிப் பிரதேசத்தில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முப்பத்தொன்பது கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிராகிருத மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுகளை ஆராய்ந்தால், அவற்றில் தமிழ் மொழிக்கு என்று தனித்துமான வரி வடிவம், தமிழ்ப் பெயர்கள், தமிழ் உறவுமுறைகள், ராஜா என்ற அரச பட்டத்துச் சமமான வேள் என்ற பட்டம் கொண்ட பெயர்கள் மற்றும் தமிழ் இடப்பெயர்கள் காணப்படுகின்றன. எனவே குருந்தலூரில் (குருந்தூர்) 13 நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு பாலி சிங்கள இலக்கியங்களில் ஆதாரம் உண்டு. குருந்தலூர் (குருந்தூர்) அகழ்வாய்வில் கிடைக்கும் தொல்பொருள் சான்றுகளை வைத்துக் கொண்டுதான் பாலி சிங்கள இலக்கியங்கள் கூறுகின்ற உண்மைத்தன்மையை உறு திப்படுத்தலாம்- என்றார். (க-214)

# யாழ். வரவேற்பு வளைவு பகுதியில் பல நாள்களாக அரங்கேறிய சூட்சும கொள்ளை அம்பலம்

யாழ்ப்பாணம், பெப். 23

ஓட்டோவுக்கு பெற்றோல் முடிந்துவிட்டது என்று பாசாங்கு வார்த்தை கூறி வீதியோரத்தில் நின்று, பல நாள்களாக பலரிடம் பணம் அபகரித்துவந்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் நாவற்குழி இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். அந்தக் குழுவினர் ஓட்டோவுடன் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நாவற்குழி பாலத்துக்கும் யாழ். வரவேற்பு வளைவுக்குமிடையில் நேற்றிரவு 7.30மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மாலை நேரமானதும் ஒரு குழுவினர் குறித்த இடத்தில் வீதியோரம் ஓட்டோவை கொண்டுவந்து நிறுத்திவைத்து விடுவர். வீதியால் பயணிப்பவர்களை வழிமறிக்கும் அவர்கள், "ஓட்டோவுக்கு பெற்றோல் முடிந்துவிட்டது. தற்போது பணம் இல்லை. உங்களிடம் பணம் இருந்தால் தாருங்கள்" என்றுகூறி பணம் அபகரித்து வந்துள்ளனர். அந்தக் குழுவினரின் இத்தகைய செயல்பாட்டை அவதானித்து வந்தவர்கள், இளைஞர்களிடம் கூறியுள்ளனர். இதனையடுத்து நாவற்குழி இளைஞர்கள் குறித்த பகுதிக்குச் சென்று சம்பவத்தை அவதானித்துள்ளனர். அந்தக் குழுவினர் அவ்வாறு மக்களை சூட்சுமமாக ஏமாற்றி பணம் அபகரித்து வருகின்றமையை உறுதிப்படுத்தினர் என்றும் அதனையடுத்தே அந்தக் குழுவினரை இளைஞர்கள் மடக்கிப்பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு அந்தநேரம் இராணுவத்தினரும் வந்துள்ளனர். சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரிடம் நடந்த சம்பவத்தைக் கூறிய இளைஞர்கள் குறித்த நான்கு பேரையும் அவர்கள் பயன்படுத்திவந்த ஓட்டோவுடன் ஒப்படைத்தனர். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர். பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நால்வரும் அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. (த-26,319)

# மந்துவிலில் வீடு புகுந்து பொருள்கள் பல திருட்டு

கொடிகாமம், பெப். 23

தென்மராட்சி மந்துவில் பகுதியில் வீடு உடைத்து, அங்கிருந்த மடிக்கணினி, அலைபேசி மற்றும் கன்பேசர் ஆகியவை திருடப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது.

வீட்டு உரிமையாளர்கள் வெளியே சென்றிந்த வேளை சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-159)

## மரண அறிவித்தல்



### அமரர்
# சிவராசா திலீபன்

முருகேசர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவராசா திலீபன் 22.02.2021 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா தேவராணியின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜேந்திரம் (ஆனந்தம்) மற்றும் இராஜகுமாரியின் அன்பு மருமகனும் சுபாசினியின் அன்புக் கணவரும் தனுசன், தீபிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அமரர் சிவதேவதாசன், கிரிதாஸ் (பிரஹா ஜெட் லைன் உரிமையாளர்) சதீஸ் (மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வினோதினி, ஜெனார்த்தனி, ரஜனி, ரஜிதா, சகிலா, சுஜாதா, மேனுகா, கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மைத்துணரும் செல்வராஜா, தியாகரட்ணம், திவாகரன், கவிராஜ், திலீபன் ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2021 (புதன்கிழமை) முருகேசர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 09.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல 15/2 முருகேசர் லேன்,**
**நல்லூர்.**
**தொ.இல : 0777222524**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மகனை...

வவுனியாவில் ஆயிரத்து 465 நாள்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் சுழற்சிமுறைப் போராட்டத்திலும் இவர் கலந்துகொண்டிருந்தார். தனது மகனைத் தேடி வந்த இவர் நேற்று சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

சிலநாள்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சு.கனகமணி என்ற தாயும் உயிரிழந்திருந்தார். இவர் 2009ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிவந்த நிலையில், சுகவீனம் காரணமாக உயிரிழந்திருந்தார். (எ-110)

### கைதிக்கு...

பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான சந்தேகநபரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி மானிப்பாய், சங்குவேலியில் வைத்து இந்த சந்தேககநபர் கைதுசெய்யபபட்டார். அவர் கடந்த 12ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் வெளியான பி.சி.ஆர். முடிவுகளில் அந்தக் கைதிக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்த சந்தேகநபரைக் கைதுசெய்தவர்கள் மற்றும் நீதிமன்றம் அழைத்துச் சென்றவர் என 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இரு பொலிஸ் சார்ஜென்டுகளும், 4 பொலிஸ் கொன்ஸ்டபிள்களும் தெல்லிப்பழை மருத்துவனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, இந்தக் கைதியுடன் தொடர்பைப் பேணிய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நால்வரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான விளக்கமறியல் கைதி மனநிலைப் பிறழ்வுடன் உள்ளதால் அவருடன் தொடாபைப் பேணியவர்களைக் கண்டறிவதில் சுகாதாரத் துறையினர் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்தக் கைதிக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பதைக் கண்டறிய முடியாத நிலைமை உள்ளது என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)




## நிகரற்ற தேசத்தின் வங்கியாளர், தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் இலங்கையில் மிகவும் புகழப்பட்ட

# 'மிகச்சிறந்த 10'

## நிறுவனங்களுள் ஒன்றாக கம்பீரத்துடன் முன்னோக்கி...

81 ஆண்டுகாலமாக முதன்மையான சேவையை மக்களுக்கு வழங்கி வரும் இலங்கை வங்கி மீண்டும் இலங்கையில் மிகவும் புகழப்பட்ட 'மிகச்சிறந்த 10' நிறுவனங்களுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1975
BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# மாநகர சபையின் முடிவால் நோயாளர்கள் சிரமப்படுவர்

## மருத்துவர் யமுனானந்தா சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப். 23**

**யாழ். போதனா மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வீதியின் ஊடாக வெளிமாவட்டப் பேருந்துக்கள் பயணிப்பதைத் தடைசெய்வதென்ற யாழ். மாநகர சபையின் முடிவால் வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைகளுக்கு வரும் ஏழை நோயாளிகளுக் கும் அவர்களது உறவுகளுக்கும் சிரமம் ஏற்படும் என்று மருத்துவர் யமுனா நந்தா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் இருந்து அதிக அளவான நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அன்றாடம் வருகின்றனர். இதய சிகிச்சைப் பிரிவு, நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவு, கண் நோயியற் பிரிவு என்பவற்றுக்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கே வருகின்றனர். இதுவரை காலமும் இத்தகைய பிரதேசங்களில் இருந்து வரும் நோயாளர்கள் மருத்துவமனை வாயிலில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் இறங்கி மருத்துவமனைக்கு சிரமமின்றி வரக்கூடியதாக இருந்தது. குறிப்பாக நெடுந்தூரம் நடக்க முடியாத நோயாளிகள் கூட இவ்வாறு சிகிச்சைக்கு வருவது வழமை.

குறித்த தடை உத்தரவு இவ்வாறான நோயாளர்களை பெரிதும் பாதிக்கும். போதனா மருத்துவமனை வீதியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வாகனத் தரிப்பிடங்களை மட்டுப்படுத்தலாம். அடுத்து மருத்துவமனை வீதியில் புதிய தொழில் முயற்சியாளர்கள், பல்பொருள் அங்காடிகள், வங்கி கட்டடத் தொகுதிகள், தனியார் மருத்துவ நிலையங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் போன்றவற்றை அமைக்க அனுமதித்தமையும் மருத்துவமனை வீதி வாகன நெரிசல் அடையக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு நாளை 24 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 25 ஆம் திகதிகளில் சில வீதிகளின் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடியபாதம் வீதி மற்றும் இராமநாதன் வீதி ஆகியவற்றின் ஊடான போக்குவரத்துக்களே மட்டுப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஆடியபாதம் வீதி, இராமநாதன் வீதி ஆகிய இரு வீதிகளும் குறிப்பிட்ட தினங்களில் ஒருவழிப் பாதைப் பயணத்துக்கு மட்டுமே அனுமதிக்கப்படும். ஆடியபாதம் வீதியில், திருநெல்வேலிச் சந்தியில் இருந்து பிறவுண் வீதிச் சந்திப்பகுதிவரை செல்வதற்கு மட்டுமே அனுமதிக் கப்படும். இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் இருந்து பரமேஸ்வராச் சந்தி நோக்கிச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

இதே நேரம், ஆடியபாதம் வீதி, வளாக ஒழுங்கை, இராமநாதன் வீதி மற்றும் ரயில் நிலைய ஒழுங்கை ஆகிய பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி வைப்பது தடைசெய்யப்பட்டிருப்பதுடன், பட்டமளிப்பு விழாவுக்கு வருபவர்களின் வாகனங்களை யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தினுள் நிறுத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-20)

# மணியின் குற்றச்சாட்டு அரசியல் நோக்கிலானது

## ஆனல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன், அரசியல் நோக்கத்தில், ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் என்று முன்னாள் முதல்வர் ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தைப் பொறுப்பேற்பதற்காக நாம் பல முயற்சிகளில் ஈடுபட்டோம். கலாசார நிலையத்தை இயக்குவதற்கான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அனுமதிக்காக பிரதமரை நேரில் சந்தித்து உரையாடவும், நிர்வாக ரீதியில் அனுமதி கோரியிருந்தோம். அதற்கான அனுமதி கிடைத்து உரையாடவுள்ள விடயங்கள் தொடர்பில் பட்டியல் கோரப்பட்டபோது இந்த விடயமே முதன்மைப்படுத்தப்பட்டு நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட்டது. நான் மாநகர மேயராகப் பதவியிலிருந்த காலத்தில் இதனைத் திறக்க முயன்றும், கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலை காரணமாக பணிகள் தடைப்பட்ட காலத்தில், சிலர் இதனை இலங்கை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்ல முயன்றனர். இதை அறிந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன், இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்து கலாசார மத்திய நிலையத்தை உடன் திறக்கவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இதனைத் திறந்து வைக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்தோம். இலங்கையில் இருந்து இந்தியா சென்ற அமைச்சர் குழாமில் இருந்த ஓர் அமைச்சரே இதனை மாநகர சபை நிர்வகிக்கமாட்டாது என்பதால் எம்மிடம் கையளியுங்கள் எனக் கோரிக்கை விடுத்தார். இதனை இந்நாள் மேயரின் பங்காளிக் கட்சியின் தலைவர் மூலம் உறுதிசெய்ய முடியும். ஏனெனில் அவரும் அந்த அமைச்சர் குழாமில் அங்கம் வகித்திருந்தார். இந்த விடயங்களை கூட்டமைப்பு சார் மாநகர சபை உறுப்பினர், அப்போதைய மாநகர சபையில் பிரஸ்தாபித்தபோதும், கலாசார மத்திய நிலையத்தை மத்திய அரசிடம் கையளிக்க முடியாது என சபையிலேயே தெரிவித்திருந்தேன். இந்தக் காலத்தில் சபையில் இருந்திருக்காத இந்நாள் மேயர், அரசியல் ஆதாயத்துக்காக ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைக்கக் கூடாது. இந்தக் கட்டடம் அமைக்கப்பட்ட காலத்தில் இந்தியா என்றாலே 'றோ' எனக் கூறி ஓடி ஒளித்து, அவர்களிடம் பெறும் உதவியையே மறுத்தவர்கள் இவர்கள் என்றார்.

இந்திய அரசின் நிதியுதவியில் யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தை இலங்கை மத்திய அரசிடம் கையளிப்பதற்கு யாழ். மாநகர முன்னாள் முதல்வர் ஆனல்ட் இணங்கியதன் காரணமாகவே அந்தக் கட்டடத்தை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று மாநகரின் தற்போதைய முதல்வர் அண்மையில் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார். (ப)

# கல்வியங்காடு மீன் சந்தை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

கல்வியங்காடு மீன் சந்தையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியை அடுத்து, சந்தைக் கட்டடம் தற்போது விஸ்த ரிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் சந்தைக்கு வரும் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பை அடுத்து சந்தை வளாகத்தில் இட நெருக்கடி ஏற்பட்டது. இதனையடுத்து தற்போது மாநகராட்சி மன்றத்தால் சந்தைக்கு அருகில் மீன் விற்பனைக்காக மேலும் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு மீன் விற்பனை விஸ்தரிக்கப்பட்டது.

அத்துடன் சந்தைக்கு வெளியே வைத்து விற்பனை செய்யும் மீன் வியாபாரிகளும், புதிய கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (ஜ-17)

# பரீட்சை நிலையங்களில் விரைவில் தொற்று நீக்கம்

யாழ்ப்பாணம், பெப்.23

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையை முன்னிட்டு அனைத்துப் பரீட்சை நிலையங்களையும் தொற்று நீக்கம் செய்வதற்கு சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளுக்கு இந்த வாரத்தில் குறுகியகால விடுமுறை வழங்கப்படவுள்ள நிலையில், வார இறுதியில் பரீட்சை நிலையங்கள் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளன.

அதைவிட பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதும் மாணவர்களின் மேசைகள் எவ்வாறு சமூக இடைவெளியுடன் ஒழுங்குபடுத்தப்படவேண்டும் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மாணவர்கள் எவ்வாறு பரீட்சை எழுதுதல் வேண்டும் போன்ற ஒழுங்குகளை மேற்கொள்வதில் சுகாதாரப் பிரிவினர் அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். (ற-17)



யாழ். இந்துக் கல்லூரி சாரணர்களால், சாரணர் ஸ்தாபகர் பேடன் பவெல் பிரபுவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கல்லூரியில் மரம் நடுகை நேற்று இடம்பெற்றது. (ம)

# மரணச்சடங்கு வீட்டில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், பெப்.23

அச்செழு பகுதியிலுள்ள மரணச் சடங்கு வீடொன்றில் திருடர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மரணச் சடங்கில் அதிகமானோர் கலந்து கொண்டதைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டு அறையில் வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு லட்சம் ரூபா பணத்தை களவாடித் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-17)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குறை கூறாமல் இறங்குக செயலில்!

இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையம் அண்மைக்காலமாக பேசுபொருளாகியிருக்கின்றது. இந்தக் கலாசார நிலையத்தில் கட்டுமானப் பணிகள் முழுமைபெற்றுள்ள நிலையில், 'அதன் நிர்வாகத்தை கொழும்புக்கு கையளிப்பதற்கு முன்னாள் முதல்வரான ஆனல்ட் திட்டமிட்டார்' என்று தற்போதைய முதல்வரான மணிவண்ணனும், "இல்லை யில்லை யாழ்ப்பாணம் மாநகர சபைதான் நிலையத்தின் நிர்வாகத்தை மேற்கொள்ளும் என்பதில் நான் தீவிரமாக இருந்தேன். இதுதொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோது அமர்வுகளில் கலந்துகொள்ளாத மணிவண்ணன் தற்போது அரசியல் ஆதாயத்துக்காகத்தான் இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்" என்று ஆனல்ட்டும் தெரிவித்திருக்கின்றனர். எவர் சொல்வது சரி, எவரின் பக்கம் நியாயம் என்பதற்கு அப்பால் இருவருடைய கருத்துக்களுமே இப்போதைய சூழலில் தேவையற்றவை என்பதுதான் இங்கே தெட்டத்தெளிவு.

தமிழர்களின் கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான அத்தியந்தத் தொடர்பினை இடையறாது பேணவே இந்தக் கலாசார நிலையம் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டதும் அதனை நிர்வகிப்பதும், பயனடைவதும் தமிழ் மக்கள் மட்டுமே என்று எல்லோரும் நம்பினர். ஆனால் இப்போது கட்டுமானப் பணிகள் பூர்த்தியான நிலையில், அதன் நிர்வாகத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கொடுக்காமல், கொழும்பின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரச தரப்பின் கருத்தாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. வெறும் நிர்வாகச் சிக்கலுக்கு உட்பட்ட விடயமல்ல இது. இதன் பின்னால் பெரும் அரசியல் பூதாகரமாக ஒளிந்துள்ளது. குறித்த நிர்வாகத்தை கொழும்பு தாமரைக் கோபுரத்தின் நிர்வாகக் குழு மேற்கொள்ள நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அப்படி மேற்கொள்ளப்பட்டுவிட்டால் இது பெயருக்குத்தான் யாழ்ப்பாணம் கலாசார நிலையம் என்றிருக்கும். அதன் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தமிழர்கள் உவகைகொள்ளும் படியாக இருக்காது.

பெரும்பான்மையினத்தின் கலை, கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாடுகள் மற்றும் அவைசார் விழுமியங்கள் என்பவற்றை தமிழர் பகுதிக்குள் வலிந்து திணிக்கும் ஒரு மையமாக கலாசார நிலையத்தை ராஜபக்சக்கள் மாற்றிவிடுவார்கள். வடக்கு - கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டற்ற பௌத்த - பேரினவாதத் திணிப்புக்களின் அடிப்படையில் பார்க்கையில் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தின்மூலம் இத்தகையதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே இதன் நிர்வாகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் தமிழர்களின் பெருவிருப்பம்.

அதேநேரம் கலாசார நிலையத்தின் நிர்வாகம் இலகுவானது, சிக்கலுக்கு உரியதல்ல என்றும் சொல்லிட முடியாது. இது யானையைக் கட்டித் தீனிபோடும் செயல். எனவே இந்த நிர்வாகத்தை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட வகையில் எவ்வாறு கொண்டுநடத்துவது என்பதுதான் தற்போதுள்ள விடயம். நிதி திரட்டல்கள் மூலம் இதைச் சாத்தியப்படுத்தலாம். அமெரிக்காவில் உள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்காக உலகளாவிய ரீதியில் நிதி திரட்டியமை, மற்றும் இலங்கையில் புற்றுநோய் மருத்துவமனைக்காக, கிரிக்கெட் வீரர்கள் நடைப்பயணம் மூலம் நிதி திரட்டியமை இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள். அத்துடன் கட்டுமானத்தை அமைத்த இந்தியா அதைக்கொண்டு நடத்த ஏதேனும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடும் கொண்டதாக அமைகின்றது. இதைச் சாத்தியப்படுத்துவதை விடுத்து, ஆனல்ட் மற்றும் மணிவண்ணன் இருவரும் சிறுபிள்ளைகள் போல, மாறி மாறி வார்த்தைகளை அள்ளி வீசுவது எவ்விதத்திலும் உதவாது. அடுத்தவர் குற்றங்களை சொல்லியே காலத்தையோட்டாமல், கலாசார நிலையத்தை மத்திய அரசாங்கத்தின் கைகளுக்குப் போக விடாமல் தடுத்து, தமிழர்களுக்கான கலாசார இருப்பாக அதை மாற்றும் நடவடிக்கையில் இறங்க வேண்டும். இறங்குவார்களா?

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - நாமல் அமரசிங்க

# இலங்கை இராணுவத்தை அவதானிக்கிறது அமெரிக்கா

## அமெரிக்கத் தூதுவர் அலைனா தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.23**

**இலங்கை இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை, அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்கச் சட்டங்கள் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கொள்கையின் அடிப்படையில், இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என்ற நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ள பாதுகாப்பு படைப்பிரிவுகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்குவதில்லை.

இலங்கைப் படையினரை தற்போதைய எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாக மாற்றுவதில், இலங்கைக்கு உதவுவது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது.

இதன் மூலம் பிராந்தியத்தினதும், உலகினதும் பாதுகாப்புக்கு பங்களிப்பை வழங்கக்கூடிய நிலையில் அவர்கள் விளங்குவதை உறுதி செய்ய விரும்புகின்றது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு என்பது தொடர்ந்தும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை வலியுறுத்தும். இது எங்கள் பயிற்சி உதவி மற்றும் ஈடுபாடுகள் தொடர்பிலான அடிப்படையான விடயம்.

இலங்கை இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை நாங்கள் உன்னிப்பாக ஆராய்வோம். படையினர் கொள்கைகள் மற்றும் இராணுவக் கலாசாரம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் உன்னிப்பாக ஆராய்வோம்.

அத்துடன் மனித உரிமைகளை நிலை நாட்டுவது நம்பகத்தன்மை மிக்க பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நடைமுறைகளுக்கான இராணுவத்தின் அர்ப்பணிப்பையும் நாங்கள் உன்னிப்பாக அவதானிப்போம் - என்றார்.(க-இ)

## நீதிமன்றம் சுதந்திரமாக இயங்கினால் ஆணைக்குழுக்கள் தேவையில்லை

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

நீதிமன்றம் சுதந்திரமாக இயங்கினால் பொலிஸ் விசாரணைகளில் தலையீடுகளும் இல்லை, ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை என சட்டத்தரணி நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உழைக்கும் மக்கள் சக்தி அமைப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சட்டத்தரணி நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது;

1978ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் அந்தந்த ஆட்சியாளர்களின் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக மாத்திரமே நியமிக்கப்பட்டன. மக்களின் பல மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டு நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை, ஐந்து பக்கங்களில் ராஜபக்சவினரை முழுமையாகத் துதி பாடியுள்ளது - என்றார். (ப)

## அந்நிய செலாவணி அதிகரிப்பு

கொழும்பு, பெப்.23

கடந்த ஜனவரி மாதம் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பிய அந்நிய செலாவணி அளவு 16.3 சதவீதத்தால் அதிகரித்து 675 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. நாணய மாற்று வீதத்தின்படி, இந்தத் தொகை 22.1 சதவீத வளர்ச்சியாக கருதப்படுகின்றது. வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் குறைந்தாலும் கடந்த ஆண்டில் மாத்திரம் அவர்கள் 7.1 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக அனுப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் 6.7 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# குண்டுத் தாக்குதல் அறிக்கை கிடைத்தால் மட்டுமே சந்திப்பு

## பேராயர் திட்டவட்டம்

**கொழும்பு,பெப்.23**



**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதி
பதி ஆணைக்குழு அறிக்கை தனது கைகளுக்குக்
கிடைக்கும் வரை தான் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்
பினரையும் சந்திக்கப்போவதில்லை என்று பேராயர் கர்
தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்
பைச் சேர்ந்த கத்தோலிக்க நாடா
ளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த
வாரம் பேராயரைச் சந்திக்கத் திட்
டமிட்டிருந்தனர். எனினும் உயிர்த்
தஞாயிறு தாக்குதல் தொடர்பான
ஜனாதிபதி ஆணைக்குழுவின்
அறிக்கை தனது கைகளுக்கு
கிடைக்கும்வரை, பேராயர் எந்த
வொரு அரசியல்வாதியையும்
சந்திக்கமாட்டார் என பேராயரின்
ஊடகப்பேச்சாளர் தென்னி
லங்கை ஊடகமொன்றுக்கு தெரி
வித்துள்ளார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு
தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி
ஆணைக்குழுவின் விசாரணை
அறிக்கையை மீள் மதிப்பீடு
செய்ய ஜனாதிபதி கோத்தாபய
ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட
ஆறு பேர் அடங்கிய அமைச்ச
ரவைக் குழுவை பேராயர் நிராக
ரித்துள் ளார். எனினும் குறித்த
ஆறுபேர் அடங்கிய அமைச்
சரவைக் குழு முதற் தடவையாக
கூடவுள்ளமை குறிப்பிடத்தக்
கது. (ஐ)

## ஆணைக்குழு அறிக்கையை ஆராய்வதற்கு புதிய குழுவா?

*கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் சந்தேகம்*

கொழும்பு,பெப்.23

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நிய
மிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்
கையை ஆய்வு செய்வதற்கான, புதிய குழுவொன்றை
நியமிப்பதற்கு முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடு
கள் தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது என்று கத்தோ
லிக்க ஆயர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின்
தலைவர் வணக்கத்துக்குரிய வின்சன்ட் ஜே பெர்
ணாந்து இந்தச் சந்தேகத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஏப்ரல் -21 தாக்குதல் தொடர்பில்
ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்
குழுவின் அறிக்கையில் மறைப்பதற்கு எதுவும்
இல்லை என்று, குறித்த அறிக்கையை ஆய்வு செய்
வதற்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபக்கு
ழுவின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்
துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நிய
மிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை
யில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மற்றும் பரிந்து
ரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைச்சரவை
உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதில் அமைச்சர்களான சமல் ராஜபக்ச, ஜோன்ஸ்
டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஸ் பத்
திரண, பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபே
குணவர்தன ஆகியோர் அங்கத்தவர்களாகப் பெயரி
டப்பட்டுள்ளனர். (க-இ)

## திருமலை துறைமுகம் இலங்கைக்கு இல்லை?

*பெ.கூ.தொழிற்சங்கங்கள் சந்தேகம்*

திருமலை, பெப்.23

திருகோணமலை துறைமுகமும் இலங்
கைக்கு இல்லாமல் போகும் ஆபத்து
ஏற்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோ
லியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்
கங்கள் எச்சரித்துள்ளன.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலி
யக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க
கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்
ஆனந்த பாலித தெரிவித்ததாவது;

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்
தலைவர் விஜேசிங்க கூறுவது என்ன?
திருகோணமலை துறைமுகத்துக்கு
சொந்தமான 500 ஏக்கர் காணியில்
முதல் கட்டமாக 100 ஏக்கர் காணியை
மூன்று கட்டங்களாக 10.2 பில்லியன்
ரூபாவை செலவிட்டு 24, எண்ணெய்த்
தாங்கிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன
எனக் கூறுகிறார். மூலோபாய திட்டமிடல்
மற்றும் செயற்றிறன் முகாமைத்து
வத்தை ஏற்படுத்த உள்ளனராம்.
இதனைச் செய்ய 10 மில்லியன் டொலர்
களாவது செலவாகும். 24 எண்ணெய்த்
தாங்கிகள் நிர்மாணித்து, கட்டடத்தை
நிர்மாணித்து 10 பில்லியன் ரூபா செல
வில் கடலுக்குள் குழாய் பதிக்க உள்ள
னராம். இதன் மூலம் திருகோணமலை
துறைமுகத்தை நாம் இழப்பது மாத்திர
மல்ல அது இந்தியாவுக்கு சொந்தமாகி
விடும் என்றார். (ப)

## பென்குயின்களில் குப்பை சேகரிப்பு

திருமலை, பெப்.23

பென்குயின் பறவையின் தோற்றத்தைக் கொண்ட பிரிக்கப்பட்ட
குப்பை சேகரிப்பு தொட்டிகள் மக்களுக்கு கையளிக்கப்பட்டன.
திருகோணமலை ரோட்டரி கழகத்தினால், திருகோணமலை பேருந்து
நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை 10.30 மணிக்கு அந்தத் தொட்டி
கள் கையளிக்கப்பட்டன. இதில் திருகோணமலை நகராட்சி மன்றத்
தலைவர் ராஜநாயகம், ரோட்டரி கழகத்தின் சார்பில் அதன் மக்கள்
தொடர்பாளர் மருத்துவ கலாநிதி ஞானகுணாளன் மற்றும் செயலா
ளர் அருள் வரதராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)



## யோகேஸ்வரனிடமும் பொலிஸ் விசாரணை

மட்டக்களப்பு, பெப்.23

பொத்துவில் தொடக்கம் பொலி
கண்டி வரையான போராட்டத்
தில் பங்கெடுத்தமை தொடர்
பில் முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர் சீ.யோகேஸ்வர
னிடமும், பொத்துவில் மற்றும்
கல்முனை பொலிஸார் நேற்று
முன்தினம் விசாரணை மேற்
கொண்டு வாக்குமூலம் பெற்ற
னர்.
வாழைச்சேனை விபுலானந்தர்
வீதியிலுள்ள அவரது இல்லத்
துக்கு நேற்றுமுன்தினம் காலை
சென்ற பொத்துவில் பொலி
ஸார் விசாரணைகளை முன்
னெடுத்தனர். அந்த விசார
ணைகள் நிறைவடைவதற்கு
இடையிலேயே கல்முனைப்
பொலிஸாரும் அங்கு சென்று
விசாரணைகளை மேற்
கொண்டனர். (ப)



## தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள்

### நேற்று அடிக்கல் நடப்பட்டது

தலவாக்கலை, பெப்.23

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீயால் பாதிக்கப்
பட்ட மக்களுக்கு 24 தனி வீடுகளை அமைக்க நேற்று
அடிக்கல் நடப்பட்டது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு
வசதிகள் இராஜாங்க அமைச்சின் வீடமைப்பு திட்டத்
தின் கீழ் இந்த அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.
குறித்த வீடுகள் தலா 13 லட்சம் ரூபா பெறுமதியில்
அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலா
ளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி
னருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தலைமையில்
இடம்பெற்ற இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபை
முன்னாள் உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் உள்ளிட்ட
தலவாக்கலை லிந்துலை நகரசபை தலைவர் பாரதி
தாசன், கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜ
மணி பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

# இந்தியாவின் ஆதரவு இல்லாமல் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது

## ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

இந்தியாவின் அனுசரணை இல்லாது
ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வு
இலங்கைத்தீவில் சாத்தியமில்லை என
ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச்
செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்
பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்
துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர்;
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின்
46 ஆவது கூட்டத்தொடர் இன்று
(நேற்று) ஆரம்பமாகி உள்ளது. இந்த
நிலையில் கடந்த காலங்களில் ஐ.
நா.வால் முன்வைக்கப்பட்ட சில விடயங்
கள் தொடர்பாக தமிழ் மக்கள் ஒரு
பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்
கள். இலங்கையில் நடந்த போர்க்குற்
றங்கள் தொடர்பில் ஐ.நா.வினுடைய
போர்க்குற்ற நீதிமன்றத்தில் இலங்கை
அரசுக்கு எதிராக விசாரணைகள் மேற்
கொள்ளப்படும் என்ற நம்பிக்கையோடு
எமது மக்கள் இருக்கின்றார்கள். ஆனால்
அவ்வாறான சூழல் தற்போது அமைய
வில்லை. ஐ.நாவுடைய நிலையில் சில
மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது
வரைபிலேயே இலங்கைக்கு எதிரான
சில விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.
ஏனென்றால் தற்போதைய சூழ்நிலை
யில் எமது மக்களுடைய எதிர்பார்ப்பு
என்பது இலங்கையை ஒரு குற்றவியல்
நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று
அங்கு சரியான முறையில் உண்மை
கள் விசாரிக்கப்பட்டு எமது மக்களுக்
கான நீதி கிடைக்க வேண்டும் என்பது
தான். பன்னாட்டுச் சமூகம் எமது மக்க
ளுக்காக, மக்களுடைய நீதிக்காகச்
செயற்பட வேண்டும். உண்மையிலேயே
இதற்கு இந்தியாவுடைய அங்கீகாரம்
மற்றும் மனுசரணை எமது மக்களுக்கு
தேவையாக இருக்கின்றது. இந்தியா
வினுடைய அங்கீகாரம் எமக்கு கிடைக்
குமாக இருந்தால் உலகமும் நமது பக்
கம் திரும்பிப் பார்க்கும் - என்றார்.
(ப-20)

# சட்டவிரோத விருந்துபசார நிகழ்வில் 17 பேர் கைது

கொழும்பு, பெப்.23

ஹபரண பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத மதுபான விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்ட 17 பேரை ஹபரண பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இந்த விருந்துபசார நிகழ்வு பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 2 ஆவது தடுப்பூசிக்கு நோயெதிர்ப்பு அதிகம்

## ஆய்வில் தகவல்

**கொழும்பு,பெப்.23**

**ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்படும் கொவிட்19 தடுப்பூசிகளை, மூன்று மாதங்கள் இடைவெளியின் பின்னர் இரண்டாவது முறையாகச் செலுத்துவதால், அதன் பலன்கள் அதிகரிக்கும். அதன் நோய் எதிர்ப்புச் சக்தி நீண்ட நாள்களுக்கு இருக்கும். இவ்வாறு பேராசிரியர் என்ட்ரூ பொலார்ட் தெரிவித்துள்ளார்.**

கிளினிக்கல் ஆய்வில் பங்கேற்ற பிரேஷில், பிரிட்டன் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 17 ஆயிரத்து 178 பேரின் மாதிரிகளில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன.

இந்த முடிவுகள் தொடர்பில் கருத்துரைத்த பேராசிரியர் என்ட்ரூ பொலார்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தயாரிக்கும் தடுப்பூசியை முதல் தடவையாக செலுத்தியவர்களுக்கு, மூன்று மாதங்கள் இடைவெளியின் பின்னர் இரண்டாவது முறையாகச் செலுத்த முடியும்.

ஆய்வுகளின் அடிப்படையில் 21 நாள்கள் அல்லது 6 வார இடைவெளிகளுக்கு பின்னர் இரண்டாவது தடவையாக தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களை விடவும், 12 வாரங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்புத் திறன் அதிகமாகக் காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

# இன அழிப்புக்கு ஐ.நாவும் காரணம்

## கூறுகிறார் அனந்தி

போர் நடந்து கொண்டிருந்த வேளையில் ஈழத் தமிழர்கள் விடயத்தில் தலையிட்டிருக்க வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை, தன்னுடைய பொறுப்பில் இருந்து நழுவியது. தமிழர்கள் மீதான இனவழிப்புக்கு ஐ.நா.வும் காரணம். இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழர்கள் விடயத்தில் ஐ.நா.வில் கொண்டுவரப்படும் பிரேரணைகள் தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரவேண்டுமே தவிர, இலங்கையைச் செல்லமாக அணுகும் நிலைப்பாடாக இருக்கக்கூடாது.

ஏற்கனவே கடந்த காலங்களில் வந்த தீர்மானங்களை விட தற்போதைய தீர்மானத்தை மோசமானதொரு தீர்மானமாகப் பார்க்கின்றோம். ஏனென்றால், போர் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ளன. நாங்கள் போரின் சாட்சிகளாகப் போய் எத்தனைமுறை பேசியும் கூட, எங்களுடைய குரல்களை இதுவரையும் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு மென்போக்குடன் இந்தப் பிரச்சினையைக் கையாள முயல்வதாகவே நாங்கள் பார்க்கின்றோம். இந்த இடத்தில், ஐக்கிய நாடுகள் சபையையும் குற்றஞ்சாட்டுகின்றோம். காலம் தாழ்த்தப்பட்ட நீதியென்பது ஒரு மறுக்கப்பட்ட நீதியாகக் கொள்ளத்தக்கது - என்றார். (க-இ)



# சித்தார்த்தனிடமும் பொலிஸ் விசாரணை

கொழும்பு, பெப்.23

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். கொழும்பு புளொட் தலைமையகத்தில் வைத்து கிளிநொச்சி மற்றும் பருத்தித்துறை பொலிஸாரால் அவர் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (வ-இ)

# 43 தீவிரவாத அமைப்புக்களுக்கு விரைவில் தடை?

கொழும்பு,பெப்.23

43 தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்வது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அனைத்து இலங்கை சலாபி கவுன்சில், இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் மற்றும் அனைத்து இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் ஆகியவையும் தடைப்பட்டியலில் அடங்கும் என்று கூறப்படுகிறது.

புலனாய்வுத்தகவல்கள் மற்றும் அறிக்கைகளின் அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்படவுள்ளது.

பாதுகாப்புப் படைகள் நீண்ட காலமாக இந்த அமைப்புகளின்மீது ஒரு கண் வைத்திருக்கின்றன. அவர்களின் தீவிரவாத போதனைகள் மற்றும் சித்தாந்தங்கள் தேசிய பாதுகாப்புக்குக் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)

## நுண்நிதி மோசடியில்

# சிக்கியுள்ள மக்களைப் பாதுகாக்க புதிய திட்டம்!

நுண்நிதி மோசடிகளிலிருந்து பொதுமக்களை விடுவிப்பதற்கு, மக்கள் மைய அமைப்புக்களை கிராமங்களில் பலப்படுத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் சமுர்த்தித் திட்டத்துக்குள் ஒரு பலமான பொறிமுறை உருவாக்கப்படும். கிராமத்தை முன்னேற்றுவதற்கு அந்தக் கிராம மக்கள் சமுர்த்தி அதிகாரிக்கு ஆதரவளிக்க வேண்டும். சமூக மைய சங்கங்களில் பங்கேற்காத குழுக்கள் தொடர்பிலும் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறு பங்கேற்காதவர்கள் சமுர்த்தி தேவையற்றவர்கள் எனக் கருதப்படுவர். முதல் கட்டமாக மக்கள் மைய அமைப்புகளுக்கு 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்படும். சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக உயர்ந்தபட்சத் தொகையாக 10 ஆயிரம் ரூபாவரை கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

சரியான முறையில் 3 லட்சம் ரூபா தொகையை நிர்வகிக்க முடிந்தால், அதையும் விடக் கூடுதலான தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (மு-இ)

# திருமணத்தில் பங்கேற்க 150 பேருக்கு அனுமதி

கொழும்பு,பெப்.23

திருமண நிகழ்வில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை 150 இலிருந்து 50 ஆக குறைக்கும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் நிகழ்வில் 150 பேர் பங்கேற்க முடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்றின் புதிய திரிபு இலங்கையில் இனம் காணப்பட்டதை அடுத்து, திருமண நிகழ்வுகளில் தொற்று பரவும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. அதனை அடுத்து சுகாதார அதிகாரிகள், திருமண நிகழ்வுகளில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும் திருமண நிகழ்வில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை 150 இல் இருந்து மாற்றாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆரம்ப சுகாதார, தொற்றுநோய் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதால், இந்த மாற்றத்தை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க-இ)

## இலங்கையின்

# பிரபல சிங்கள நடிகரின் மகனுக்கு கொரோனா

கொழும்பு,பெப்.23

இலங்கையின் பிரபல நடிகரான ஜெக்சன் அந்தனியின் மகன், சஜித அனுத்தரவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தனக்கும் தனது மனைவிக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று அவர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது எனவும், தம்முடன் நெருங்கிய தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சஜித அனுத்தர தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# துரைராஜா ஞாபகார்த்த விருதை இடைநிறுத்தியது யாழ். பல்கலை

**யாழ்ப்பாணம், பெப்.23**

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்க விருது, இம்முறை இடைநிறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.**

பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்க விருது கலைப் பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவனுக்கும், பல்கலைக் கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவனுக்கும் வழங்கப்படுகின்றது. இம்முறை இந்த விருதுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் ஊடகத் துறையைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு சிறந்த மாணவனுக்கான பல்கலைக்கழக மட்ட விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மெய்யியல் துறை மாணவன் ஒருவரிடம் இருந்து துணைவேந்தருக்குக் கிடைத்த மேன்முறையீட்டின் அடிப்படையிலும், ஆதாரங்களின் அடிப்படையிலும் விசேட மூதவைக் கூட்டம் கூட்டப்பட்டு மெய்யியல் துறை மாணவன் விருதுக்கு உரியவராக அறிவிக்கப்பட்டார். எனினும், மெய்யியல் துறை மாணவனுக்கு எதிராக மாணவர் தரப்பில் இருந்து மேன்முறையீடுகளும், ஆதாரங்களும், புதிய சாட்சியங்களும் கிடைத்த வண்ணம் இருப்பதனால், விருதுக்குரியவரைத் தெரிவு செய்வதற்குக் கால அவகாசம் போதாததால் விருது வழங்கல் இடைநிறுத்தப்படுகிறது என்றும், உரிய விசாரணைகள் இடம்பெற்று பிறிதொரு விழாவில் இந்த விருதுகள் வழங்கப்படும் என்றும் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ப-26)



## இந்திய மீனவர் அத்துமீறல்; மீன்பிடி வலைகள் நாசம்

யாழ்ப்பாணம், பெப்.23

எல்லை தாண்டி அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களால் வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி மீனவர்கள் மூவரது பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டு நாசம் செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் கடற்தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் மூவரது வலைகளே இவ்வாறு இந்தியப் படகுகளால் துண்டாடப்பட்டும், இழுத்துச் செல்லப்பட்டும் உள்ளன. வங்கிகளில் கடன் பட்டு வலைகளைக் கொள்வனவு செய்தே நாம் தொழில் செய்கின்றோம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்து தமக்கு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (வ-113)

## திண்மக் கழிவகற்றும் செயற்பாடு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

நுளம்பைக் கட்டுப்படுத்தும் முகமாக திண்மக் கழிவகற்றும் செயற்பாடுகள் வண்ணார்பண்ணை மற்றும் நாவாந்துறை பிரதேசங்களில் கடந்த வாரத்தில் இரண்டு நாள்களாக இடம்பெற்றன.

கடந்த சனிக்கிழமை நாவாந்துறை பிரதேசத்தில் ஜே/83 கிராம அலுவலர் பிரிவிலும், ஜே/83 கிராம அலுவலர் பிரிவிலும், கடந்த ஞாயிற்றுக்கிழமை வண்ணார்பண்ணையில் ஜே/97 கிராம சேவகர் பிரிவிலும் இந்த திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

அத்துடன் நுளம்புகளின் பெருக்கத்துக்கு காரணமாக அமையும் உக்காத கழிவுப் பொருள்களே அதிகளவில் மக்களால் சேகரிக்கப்பட்டு கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்தும் இந்த வாரத்திலும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டப்படுத்த உக்காத கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட வுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ச-17)

## தாய் மொழி விழா மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, பெப்.23

தாய்மொழி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் ஏற்பாட்டில் தாய்மொழி விழா செங்கலடி செல்லம் பிறிமியர் திரையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அமைப்பின் தலைவர் க.மோகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அரசியலாளர்கள், கல்வியியலாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் சமூக மட்டப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில், தமிழ் கலாசார முறைப்படி அதிதிகள் வரவேற்கப்பட்டு, தமிழின் தொன்மை மற்றும் பெருமை தொடர்பில் சான்றோரால் விவரிக்கப்பட்டன. அத்துடன், மாவட்டத்தின் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் என, தெரிவு செய்யப்பட்ட 25க்கும் மேற்பட்ட புலமைமிக்கோர், நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-150)



## மிருசுவிலில் கொரோனாத் தொற்று; பாடசாலை, தேவாலயங்களுக்கு பூட்டு

சாவகச்சேரி,பெப்.23

கொரோனாத் தொற்றுக் காரணமாக மிருசுவில் மற்றும் தவசிக்குளம் பகுதிகளில் தேவாலயங்கள் மற்றும் பாடசாலை என்பவை மூடப்பட்டுள்ளன.

மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து இக் குடும்பத்துடன் தொடர்புகொண்டவர்கள் என்ற ரீதியில் 70 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இதன் எதிரொலியாக மிருசுவில் மற்றும் தவசிகுளம் போன்ற இடங்களில் உள்ள தேவாலயங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழிபாடு இடம்பெறமாட்டாது என்று நிர்வாகிகளால் அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்சியாக மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையை மூடுமாறு பெற்றோர் விடுத்த வேண்டுகோளையடுத்து பாடசாலை செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன. (ஜ-9)

## பாம்பு தீண்டியதில் இளைஞன் மருத்துவமனையில்

சாவகச்சேரி, பெப் 23

வயலில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோலை அள்ளிய இளைஞர் ஒருவருக்கு (வயது-26) அதனுள் மறைந்திருந்த புடையன் பாம்பு கடித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கைதடியில் இடம்பெற்றது.

நெல் அறுவடையின். பின்னர் சூடு மிதிக்கப்பட்டு குவிக்கப்பட்டி ருந்த வைக்கோலை வாகனத்தில் ஏற்றுவதற்காக அள்ளியபோதே பாம்பு கடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த இளைஞனுடன் வயலுக்குச் சென்றவர்கள் இளைஞனை வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இந்த நிலையில் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இனைஞன் அனுமதிக்கப்பட்டார். (ப-9)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் நீர்வேலி கந்தசுவாமி ஆலய வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சைவசமய மரபில் புராணபடலத்தின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (வ-இ)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.23

கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இதன்படி, எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை மாசி மகத்தன்று முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-17)

## துப்புரவுப் பணி


சாவகச்சேரி, பெப்.23

சாவகச்சேரி கச்சாய் வீதியில், படையினரும், சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நேற்று துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

இதே வேளை உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப் பொருள்களை தரம், பிரித்து குப்பை அகற்றும் வாகனத்தில் வழங்க வேண்டுமென வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினரால் பிரசுரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் வீடு வீடாகச் சென்று விநியோகித்தனர். (ற-9)

# கொரோனாவை விட ஆபத்தானது உருமாற்றம் பெறும் நிபா வைரஸ்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை



கொழும்பு,பெப்.23

**கொரோனாத் தொற்றை விட 75 மடங்கு வீரியமுடைய, மூளையைப் பாதிக்கும் நோய் ஒன்று அடுத்த தொற்று நோயாக மாறக்கூடும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த ஆபத்தான நோயால் மில்லியன் கணக்கானவர்கள் கொல்லப்படலாம் என்று விஞ்ஞானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அடுத்து வரவிருக்கும் பெருந்தொற்றான இந்த நோய், இதுவரையான தொற்றுநோய்களில் மிகப்பெரியது என்று விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். பழங்களை உண்ணும் வௌவால்கள் மூலம் பரவும் தொற்று நோயான உருமாற்றம் காணும் நிபா, மனித குலத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் அடுத்த பெருந்தொற்றாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடுமையான மூளை வீக்கம், வலிப்பு மற்றும் வாந்தியெடுத்தல் ஆகியவை இந்த சக்திவாய்ந்த நோயின் சில அறிகுறிகளாகும். மலேசியாவில் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல்முறையாக இந்த நிபா வைரஸ் கண்டறியப்பட்டது. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட பாதிப்புகள் நிபா வைரஸ் மிகவும் ஆபத்தானது என்பதைக் காட்டுகின்றன. இதன் இறப்பு விகிதம் 40 முதல் 75 வீதம் வரை இருக்கும். இம்பீரியல் கல்லூரியின் ஆய்வுகளின் படி கொரோனா பெருந்தொற்றின் இறப்பு விகிதம் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே. கொரோனா பெருந்தொற்றால் இதுவரை 2.5 மில்லியன் மக்கள் மரணமடைந்துள்ளனர். ஆனால் அடுத்து வரவிருக்கும் நிபாவால் மரண எண்ணிக்கை பலமடங்கு அதிகரிக்கும். கொரோனா போல் அல்லாமல், நிபா உணவு மூலமாகவும், பாதிக்கப்பட்டவர்களுடன் பழகுதல் மூலமாகவும் அல்லது விலங்குகளின் கழிவுகள் மூலமாகவும் பரவுகிறது. தென்கிழக்கு ஆசியா, தெற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கா, அமேசானைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கிழக்கு ஆஸ்திரேலியா உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளும், உருமாற்றம் காணும் புதிய நிபா தொற்றுநோய்க்கு அதிக ஆபத்து உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## திருகோணமலைக்கு ஜனாதிபதி பயணம்

திருகோணமலை, பெப்.23

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோமரங்கடவெல கிராமத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் 27 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதியின் இந்த விஜயத்தை முன்னிட்டு இந்தப் பிரதேசத்தில் உள்ள பல வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. (ச-இ)

## டுபாயிலுள்ள இலங்கைக்கான தூதரகம் பூட்டு

கொழும்பு,பெப்.23

டுபாயில் அமைந்துள்ள இலங்கைத் துணைத் தூதரகம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தூதரகத்தில் பல ஊழியர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் தூதரகம் மூடப்பட்டுள்ளது என்று டுபாய் துணைத் தூதரகம் விடுத்துள்ள அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளை வரை தூதரகம் மூடப்பட்டிருப்பதால், இந்தக் காலத்தில் அவசர நிலைமைகளில் பொதுமக்கள் slcg.dubai@mfa.gov.lk என்ற மின் அஞ்சல் மூலம் துணைத் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## ஹற்றனில் மேலும் 11 பேருக்கு தொற்று!

ஹற்றன், பெப்.23

ஹற்றனில் மேலும் 11 பேருக்கு கொவிட்19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஹற்றன் மெண்டிஸ் மாவத்தையில் மூன்று பேருக்கும், பிரவுன்ஸ் வீதியில் மூன்று பேருக்கும், வில்பர்ட்புரம் பகுதியில் மூன்று பேருக்குமாக 9 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் டிக்கோயா கிளங்கன் மருத்துவமனையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இருவருக்கும் தொற்றுறுதியாகியுள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் அவர்களைக் கொரோனாச் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது . (ற-இ)

## கடன் நிலை தொடர்பில் இணையவழிக் கருத்தரங்கு

கொழும்பு, பெப்.23

இலங்கையின் கடன் நிலைமை - நாம் ஒரு தீர்வை நோக்கியா அல்லது நெருக்கடியை நோக்கியா பயணிக்கின்றோம்? எனும் தலைப்பில் இணையவழி கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கை கடன் நிலைத்தன்மை குறித்து கலந்துரையாடுவதற்கான கொள்கை மேம்பாட்டு மற்றும் ஆலோசனைக் குழுவான வீமன்சா ஏற்பாடு செய்துள்ளது. நாளைக் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் சிறப்புரை வழங்கவுள்ளார். இதில் பங்கேற்க விரும்புவோர் https://www.facebook.com/Veemansa 101970975254803 என்ற முகநூல் பக்கத்தினூடாக அல்லது 0773660520 என்ற இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு முன்பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## மூடி மறைக்கப்படுகின்றன கொரோனா உயிரிழப்புக்கள்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உண்மையான தரவுகள் மறைக்கப்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உண்மையான தகவல்கள் கிடைக்காமையால் சுகாதாரப் பணியாளர்களுக்கு தற்போது கடுமையான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. கீழ் மட்டத்தில் இடம்பெறும் உண்மையான உயிரிழப்புக்களின் எண்ணிக்கை தொடர்பில், தகவல் வெளியிடப்படுவதில்லை. இதன் காரணமாக சுகாதாரப் பணியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் மோதல் நிலைமை ஏற்படும் ஆபத்துள்ளது.

கிராமங்களில் இடம்பெறும் உயிரிழப்புக்கள் தரவுகளுக்குள் உள்ளடக்கப்படுவதில்லை. எனவே தரவுகள் சரியாக இல்லை என்றால் அது குழப்ப நிலையையும் நெருக்கடி நிலையையும் ஏற்படுத்தி விடும் - என்றார். (ற-இ)

## அலி சப்ரியின் கருத்துக்கு மகா சங்கத்தினர் எதிர்ப்பு

கொழும்பு,பெப்.23

விகாரைகள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான சட்டம் தனியான சட்டம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு, மகா சங்கத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்தின் பிரதி சபாநாயகருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

11 பௌத்த பிக்குகள் கையொப்பமிட்டுள்ள அந்தக் கடிதம் எல்லே குணவன்ச தேரரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதுபோன்ற தவறான கருத்துக்காக அமைச்சருக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நீதி அமைச்சர் முன்வைத்த கருத்தை, நாடாளுமன்ற ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறும் மகா சங்கத்தினர் கோரியுள்ளனர். பௌத்த விகாரைகள் மற்றும் கோயில்கள் சட்டம் ஒரு தனி நபர் சட்டம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்துள்ளார். எனினும் பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்கள் சட்டம் அரசமைப்பின் 9 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சட்டமாக இருப்பதால், அமைச்சரின் இந்த அறிக்கை புத்த சாசனத்துக்கு எதிரான ஒரு தீவிரமான அறிக்கை என்று மகா சங்கத்தினர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (க-இ)

## கண்ணாடி அணிபவர்களுக்கு தொற்றுக்கு சாத்தியம் குறைவு



கொழும்பு, பெப்.23

மூக்குக் கண்ணாடி அணிபவர்களுக்கு கொரோனா தொற்றுவதற்கான சாத்தியம்.3 மடங்கு குறைவு என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள ஆய்வுக் குழுவொன்றால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

304 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் மூக்குக்கண்ணாடி அணிபவர்கள் குறைந்தளவிலேயே தத்தமது முகத்தைத் தொடுவதால் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றும் சாத்தியம் குறைவு என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ-இ)

# இன்றைய நாள்

**மேடம்:** ஒருமுறைக்கு இருமுறை யோசித்து எதிலும் இறங்குவீர்கள். பிரச்சினையை கிளப்பும் நபர்களை சற்றுத் தள்ளியே வையுங்கள். மனதை குவித்து வெல்வீர்கள்.

**இடபம்:** இன்று சிறு சிரமங்களை எதிர்த்து நின்று வெல்வீர்கள். பிரச்சினையைக் கண்டு அஞ்சாமல் சாதிப்பீர்கள். கவலை தீரும். புதிய கலை ஒன்றைக் கற்பீர்கள். நிம்மதி கிடைக்கும்.

**மிதுனம்**வயிறு தொடர்பான உடல் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. முயற்சி செய்த சில விஷயங்களில் தாமதம் ஏற்படலாம். மன நிறைவு வரும். அலைச்சலுக்கு பிறகு முயற்சி கைகூடும்.

**கடகம்:** தன்னம்பிக்கை குறையாமல் இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது. பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்டாமல் நிதானமாகப் பேசுங்கள். பணியிடத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். சகோதரர்களின் சந்திப்பு நிகழும். ஆரோக்கியம் பற்றிய பயம் அவசியமற்றது. மற்றவரை அனுசரிப்பீர்கள்

**கன்னி**பிறரைப் பற்றிய நல்ல விஷயங்களை வெளிப்படுத்துவீர்கள். புதிய நபர்களிடம் பேசும்போது கவனமாக இருப்பது நல்லது. பணியிடத்தில் எதிர்பார்த்த துறைமாற்றம் உண்டாகலாம்.

**துலாம்:**மகிழ்ச்சியான நாள். முன்பு செய்த தவறுக்கு வருந்துவீர்கள். கோயில் திருப்பணிகளுக்கு உங்கள் பங்களிப்பைச் செய்வீர்கள். நீண்டகாலம் எதிர்பார்த்த உங்கள் அதிகாரியின் பரிவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** கலைத்துறையினருக்கு நன்மை உண்டு. பக்தி அதிகரிக்கும். வெற்றி, தோல்வி என மாறி மாறி சந்திக்க வேண்டி வரும். புதிய முயற்சியை இரண்டு நாள் தள்ளி வைப்பது நல்லது..

**தனுசு:** பிறரின் பிரச்னையில் தலையிடுவதைத் தவிர்ப்பீர்கள். தாழ்வு மனப்பான்மை உங்களை விட்டுப் போகும்படி வெற்றி வரும். ஆணவம் இல்லாமல் நடந்து கொள்ள முயற்சியுங்கள்.

**மகரம்:** உடல் உபாதை தீரும். மன வருத்தம் நீங்கும். செலவு குறையும். பிள்ளைகளின் நலன் அதிகரிக்கும். மனதில் இருந்த பயமான எதிர்பார்ப்பு நல்ல முறையில் முடியும்.

**கும்பம்:** பொறுப்பாகச் செயல்படுவீர்கள். பணியிடத்தில் பிறரின் மனநிலையை உணர்ந்து செயல்படுவீர்கள். பணியாளர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுப் பெறுவீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத வகையில் உறவினர், நண்பர் வருகை உண்டு. அலுவலகத்தில் வெளிப்படையாகப் பேச வேண்டாம். மனதில் பலம் கூடும். ஆரோக்கியம் பற்றிய பயம் தீரும்.







# மாணவர்களுக்கு கொரோனா பாதுகாப்பு பொருள்கள்

மன்னார்,பெப்.23

மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாப் பாதுகாப்பு பொருள்கள் கையளிக்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமான மெசிடோவின் ஏற்பாட்டில் மன்னார் உயிலங்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சிவராஜ இந்து வித்தியாலயம் மற்றும் மடுக்கரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் குணபாலன்,பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வாசுகி சுதாகரன், மெசிடோ நிறுவன ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ஐ-213,60, 56)



# வீதிகளில் உலரவைத்த நெல் மழையில் நனைந்து நாசம்

## விவசாயிகள் கவலை

மன்னார்,பெப்.23

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக வீதிகளில் உலர வைக்கப்பட்ட நெல் மணிகள் மழையில் நனைந்து நாசமாகின என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மன்னாரில் பெருநிலப்பரப்பாக காணப்படும் முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு, மற்றும் மடு ஆகிய பிரதேசங்களில் பெருமளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அறுவடை காலம் ஆரம்பிக்கப்பட்டதால், அறுவடை செய்த நெல்லைக் காயப்போடுவதற்கு தளம் இல்லாமையால்,விவசாயிகள் வீதிகளில் நெல்லை காயப்போட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் காலை முதல் பெய்த மழை காரணமாக அவை முற்றிலும் நனைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-213)

## தவக்கால சிந்தனை

### செபமே பெரும் ஆயுதம்

அவரைத் தொட்ட யாவரும் குணமானார்கள். (மாற்கு 6.26). இயேசுவால் தொடப்பட்டவர்கள், இயேசுவைத் தொட்டவர்கள் உடனே குணமடைந்தார்கள். அவர்களில் இருந்த நோயின் தன்மை மறைந்து விலகி ஓடிற்று. ஆண்டவரின் வல்லமை அவர்கள் சரீரம் முழுவதையும் நிரப்பிற்று. அதற்குக் காரணம் என்ன?. ஆண்டவரின் ஆவியானவர் என் மேல் இருக்கிறார். அதுதான் அற்புதங்களின் இரகசியம். உன்மேல் ஆவியானவர் இருந்து உன்னை ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்புகிறாரா? உன்னோடு வழி நடந்து வருகிறாரா? அனுதினமும் ஆவியானவரின் செயற்பாட்டுக்கு ஒப்புக்கொடுக்கிறாயா? சிந்தி. கிறிஸ்தவன் என்று பெயர் வைத்தும் ஏன் முன்னேற்றமில்லை?, ஏன் பிரகாசிக்கவில்லை?. ஏன் அற்புதங்கள், அடையாளங்கள் நிகழவில்லை?. கொள்ளை நோய்கள் ஏன் குணமாகவில்லை? தியானித்துப்பார். உன் மாமிசக் கண்களால் பார்த்து அறிய முடியாமல் இருக்கலாம். அவருன்னை விட்டு விலகுவதுமில்லை. கைவிடுவதுமில்லை. ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். வல்லமையின் ஆவி நம்மைத் தொடர இப்பொழுதே செபியுங்கள். உங்கள் பாத்திரம் நிரம்பி வழியட்டும். மகிழ்ச்சியாயிரு.

ஏ.றெக்ஸ், ஈச்சமோட்டை

# பூநகரி அரசபுரம் வீதி சேதம்; பாடசாலை பஸ் சேவை பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

பூநகரி அரசபுரம் ஊடாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கான இலங்கை போக்குவரத்து பஸ் சேவை இடம்பெறாமையால் 68 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு மாதங்களாக அரசபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான எட்டு கிலோமீற்றர் வீதியில் மூன்று இடங்களில் பெரும் குழிகள் ஏற்பட்டதால் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை இடம் பெறவில்லை. இலங்கை போக்குவரத்து சபையும் குறித்த மூன்று குழிகளையும் மூடித் தருமாறு கோரிக்கை விடுத்தும் பூநகரி பிரதேச சபை இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அரசபுரத்தில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்துக்கு வருகின்ற மாணவர்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே குறித்த குழிகளை மூடி போக்குவரத்து சேவை இடம் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-13)



வன்முறையைத் தூண்டுகிறது என

## மியான்மர் இராணுவத்தின் பேஸ்புக் பக்கம் முடக்கம்

நைபிட்டோ, பெப். 23

மியான்மர் இராணுவத்தின் அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கமான டாட்மேடவ், பேஸ்புக் வரம்புகளை மீறிய குற்றச்சாட்டில் முடக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் கடந்த தேர்தலில் ஆங் சாங் சூச்சியின் தேசிய ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக அந்த நாட்டு ராணுவம் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்ததுடன், புதிய அரசை ஏற்கவும் மறுப்புத் தெரிவித்தது. இதன் தொடர்ச்சியாக கடந்த முதலாம் திகதி சூச்சி தலைமையிலான அரசை ஆட்சியில் இருந்தும் அகற்றியது.

இதையடுத்து, மியான்மரில் ராணுவ ஆட்சிக்கு எதிராகப் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ராணுவம் விதித்துள்ள தடையை மீறி இந்தப் போராட்டங்கள் நடைபெற்று வருவதால் போராட்டத்தை ஒடுக்க அடக்குமுறையை ராணுவம் கையாண்டு வருகிறது.

இந்த நிலையில், மியான்மர் ராணுவத்தின் அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கமான டாட்மேடவ், பேஸ்புக் வரம்புகளை மீறியதற்காக முடக்கப்பட்டுள்ளது. பலமுறை பேஸ்புக்கின் வரம்புகளை குறித்த பக்கம் மீறியது என்றும் அதன் தொடர்ச்சியான நடவடிக்கையாகவே தற்போது முடக்கப்பட்டுள்ளது என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (ம)



## டெக்சாஸில் பேரழிவு அறிவித்தார் பைடன்!

வொஷிங்டன், பெப். 23

டெக்சாஸில் கடும் பனிப்பொழிவு காரணமாக கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதனை பெரும் பேரழிவாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

பனிப்பொழிவு காரணமாக மின்சாரம் மற்றும் தண்ணீர் இல்லாமல் மக்கள் தவித்து வருகின்றனர். சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

20க்கும் அதிகமானவர்கள் கடும் குளிரால் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே டெக்சாஸைப் பேரழிவு மாநிலமாக அறிவித்துள்ளார் பைடன்.

ஹவுஸ்டன் மாநிலத்திலும் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. எனினும் அது பேரழிவாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் பேரழிவு அறிவிப்பு வெளியிடப்படும் நிலையில்தான் ஹவுஸ்டனும் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# சவூதி இராணுவத்திலும் பெண்களுக்கு அனுமதி



ரியாத், பெப். 23

**சவூதி அரேபிய இராணுவத்தில் பெண்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சவூதி பாதுகாப்புத் துறை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.**

சவூதியில் பெண்களுக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தன. பட்டத்து இளவரசராக பின் சல்மான் அறிவிக்கப்பட்டதை அடுத்து பெண்களுக்கு விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, பெண்கள் கார் செலுத்துவதற்கும், கால்பந்தாட்டங்களை நேரில் சென்று பார்ப்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடைகள் முதல் கட்டமாக நீக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக சவூதி இராணுவத்தில் பெண்கள் இணைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

'பொருளாதாரத்தில் சவூதி கச்சா எண்ணெயை மட்டுமே நம்பியிருக்கின்றது. இனிவரும் காலங்களில் கச்சாவுக்குப் பதிலாக பல்வேறு துறைகளில் வருவாய் ஈட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது இதனால் வெளிநாட்டுச் சுற்று[...]ாவிகளைக் கவர்வதற்காகவும், [...]ண்களும் நாட்டின் பொருளாதா[...]தில் பங்கெடுக்க வேண்டும் என்ட[...]ற்காகவும் சில கட்டுப்பாடுகளை[...]க்க வேண்டியுள்ள தேவை ஏற்[...]ள்ளது' என்று பட்டத்து இள[...]சர் முன்னதாக அறிவித்திருந்[...]மை குறிப்பிடத்தக்கது. (ம)



## பறப்பின்போது தீப்பிடித்தது விமானம்

***அதிஷ்டவசமாகத் தப்பினர் பயணிகள்***

வொஷிங்டன், பெப். 23

அமெரிக்காவின் டென்வரில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானத்தின் ஒரு இயந்திரம் விமானப் பறப்பின்போதே தீப்பிடித்தது. எனினும் விமானியின் சாதூரியத்தால் பயணிகள் எவருக்கும் காயமோ உயிராபத்தோ ஏற்படவில்லை.

அமெரிக்காவின் டென்வர் நகரில் இருந்து நேற்றுமுன்தினம் ஹொனலுலு நகருக்கு யுனைடெட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பயணிகள் விமானம் புறப்பட்டுச் சென்றது. இதில், 231 பயணிகள் மற்றும் 10 விமான ஊழியர்கள் பயணம் செய்தனர். விமானம் 15 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது,

ஒரு இயந்திரத்தில் தீப்பற்றியது. இதனால் விமானம் உடனடியாக டென்வர் விமான நிலையத்துக்குத் திருப்பப்பட்டது. மீட்புக் குழுவினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். எனினும் வரும் வழியிலேயே விமானத்தின் இயந்திரத்தில் பற்றிய தீ வேகமாகப் பரவி, சில பாகங்கள் உடைந்து தரையில் விழுந்துள்ளன. இதனால் பயணிகளிடையே கடும் பீதி ஏற்பட்டது. விமானம் டென்வர் வரை செல்லுமா என்ற அச்சமும் ஏற்பட்டது. எனினும் பதற்றப்படாமல் சாமர்த்தியமாக செயல்பட்ட விமானி, விமானத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கினார். துரித கதியில் தீ [illegible] காப்பாற்றப்பட்டனர். (ம)

## நவால்னிக்கு பிணை மறுப்[...]

மொஸ்கோ, பெப். 23

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி, பி[...]ன கோரி மனு விண்ணப்பித்திருந்த நிலையில் அது நீ[...]ன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் புடினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி. ரஷ்ய அதிபர் தேர்தலின்போதும் தொடர் பிரச்சாரங்களில் ஈடுபட்ட நவால்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது. ஆனால், புடின் அரசு அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, அவரைத் தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்தது. இருப்பினும் நவால்னி தொடர்ந்து பொதுவெளியில் புடினின் அரசை விமர்சித்து வருகிறார். இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் டா[...]ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்[...]ாது நவால்னி மயங்கி விழுந்தார். இதனைத் தொடர்ந்து [...]வர் ஜேர்மனியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். நவால்[...]க்கு விஷம் வைக்கப்பட்டதை ஜேர்மனி அரசு சமீபத்தில் உ[...]திப்படுத்தியது. அவருக்கு விஷம் வைக்கப்பட்டது தொ[...]ாக தங்களுக்கு ஆதாரம் கிடைத்துள்ளதாக ஜேர்மனி தெ[...]வித்தது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா முற்றி[...]ாக மறுத்தது.

இந்த நிலையில் ரஷ்யா திரும்பிய நவால்னி, அண்ண[...]ில் கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து ர[...]யா முழுவதும் நவால்னியின் ஆதரவாளர்கள் போர[...]த்தில் ஈடுபட்டனர். அவ்வாறு போராட்டத்தில் ஈடுப[...] 10 ஆயிரம் பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டு வி[...]க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பிளாஸ்ரிக் எனும் பேரரக்கன்

■ ஞா.பிரகாஸ்



நாட்டில் மனிதர்களிடம் பொருள்களுக்கான தேவை எவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு கழிவுகளின் பெருக்கமும் இருக்கும். கழிவுகளின் பெருக்க நிலை காரணமாக அண்மைய காலங்களில் இலங்கையில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருந்தன. அது மட்டுமல்ல, இந்தக் கழிவுகளால் மலை போன்று உருவாகிய குப்பை மேட்டினால் அப்பாவி மக்கள் பலரினது உயிர்கள் காவு கொள்ளப்பட்ட பெரும் துயரும் நடந்தேறியிருக்கின்றது. இது சகலரும் அறிந்த விடயம் என்பதால், இக்கட்டுரையானது கழிவுகளினால் ஏற்படும் பாதிப்பைப் பற்றிப் பேசாமல் சாத்தியப்படக்கூடிய செயற்திட்டங்கள் சிலவற்றைப் பற்றியே பேசப்போகின்றது.

பொருட்கழிவுகளில் உக்கக்கூடிய கழிவுகள் ஆபத்தற்றவையாகவும், உக்கக்கூடியவை அல்லாத பிளாஸ்டிக் கழிவுகள் சூழலுக்கு ஆபத்தானவையாகவும் பார்க்கப்படுகின்றன. தற்காலத்தில் அன்றாட மனிதப் பயன்பாட்டுக்கு இன்றியமையாத ஒன்றாக பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனை மாறிவிட்டது. இலங்கையில் உள்ளூராட்சிச் சபைகளின் கீழ்வரும் பிரதேசங்களில் பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் மற்றும் நாடளாவிய ரீதியிலான மீள்சுழற்சி நடைமுறைகள் இல்லாததால் பிளாஸ்டிக் கழிவுகள் வீதியோரங்களிலும், கால்வாய்களிலும், வெற்றுக்காணிகளிலும் குவிந்து வருகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கு பிளாஸ்ரிக் கழிவுகளின் தாக்கமும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. இதனை வெள்ள நிலைமைக்கு பின்னர் மாநகர கழிவகற்றல் ஊழியர்கள் மேற்கொண்ட கழிவகற்றல் நடவடிக்கையின்போது அனைவராலும் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக காணப்படும் கால்வாயில் இருந்து பெருமளவு பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்கப்பட்டன. இதற்கு பிளாஸ்ரிக் போத்தல்கள் உள்ளிட்ட கழிவுகளைக் கண்டபடி வீதிகளில் வீசிவிட்டு செல்லும் மக்களின் பொறுப்பற்ற செயற்பாடும், உள்ளூராட்சிச் சபைகளின் அசமந்தப் போக்குமே காரணமாகும். அவ்வாறு, மக்கள் பொறுப்பற்றவர்களாக செயற்படுவதைத் தடுக்கவும், தமது சபைகளை இவ்விடயத்தில் அக்கறையுடன் செயலாற்றச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் உள்ளூராட்சி சபைகளால் செயற்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.

### மீள்சுழற்சி முறையும் அதற்கான சேகரிப்பும்

மக்களிடம் பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றுக்கான தேவைப்பாடு அதிகமாக இருப்பதால் அவற்றைத் தடை செய்வதோ அல்லது கட்டுப்படுத்துவதோ சாத்தியப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆனால் பாவித்த கழிவுகளாக மாறும் இந்த பிளாஸ்ரிக், பொலித்தீன் உள்ளிட்டவற்றை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக கண்டபடி பெருக விடாது பாதுகாப்பாகச் சேகரித்து ஒன்றாக்க வேண்டும். பின்னர் அவற்றை மீள் சுழற்சி மையங்களுக்கு அனுப்பி வைத்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம். இது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளால் சூழல் மாசுபாடு, பிற உயிரினங்களுக்கு தீங்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான முதற்கட்டத் தீர்வாக இருக்கும். ஆனால் அத்தகைய செயற்திட்டங்கள் அனைத்து உள்ளூராட்சி சபைகளிடமும் கீழ்வரும் பிரதேசங்களிலும் காணப்படுவதில்லை.

ஒருசில உள்ளூராட்சிச் சபைகளே பிளாஸ்ரிக், பொலித்தீன் ஒழிப்புச் செயற்பாடுகளில் அக்கறை கொண்ட அமைப்புக்களின் முயற்சியால் நன்மைபயக்கும் கழிவு முகாமைத்துவ திட்டங்களை முன்னெடுக்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர சபைக்கு கீழ்வரும் பிரதேசங்களின் பிளாஸ்டிக், பொலித்தீன் உள்ளிட்டவற்றை சேகரித்து மீள்சுழற்சி முகாமைத்துவத்துக்கு உட்படுத்தும் நோக்கில் வேள்ட் விஷன் நிறுவனத்துடன் இணைந்து நகர சபையால் நிறுவப்பட்ட கொள்கலனிலான வள நிலையத்தை முன்னுதாரணமாகக் குறிப்பிடமுடியும்.

பிரதேச வாசிகள் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளிலும் கிராமத்திலும் காணப்படும் பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளைச் சேகரித்து குறித்த வள நிலையத்தில் வழங்க முடியும். வெறுமனே கழிவைச் சேகரித்து வழங்குங்கள் என்றால் அதனை நம்மவர்கள் கணக்கில் எடுக்க மாட்டார்கள் என்பதை முன்னரே ஊகித்து, கழிவுகளை சேகரித்து வழங்குவோருக்கான ஊக்கத் தொகை வழங்கும் நடைமுறையும் குறித்த வள நிலையத்தில் ஏற்படுத் தப்பட்டுள்ளது. குறித்த வள நிலையம் திறக்கப்பட்டபோது நபர் ஒருவர் பெருந்தொகை பிளாஸ்டிக் கழிவுகளைக் கையளித்தார்.

பின்னாட்களில் சிறுவர்கள் சிலர் தாமாக இணைந்து தத்தமது வீட்டு சுற்றுப்புறங்களில் காணப்பட்ட கழிவுகளைச் சேகரித்து வழங்கியிருந்தனர். இந்தச் செயற்பாடு ஏனையோருக்கு ஊக்கமளிக்கும் விதமாகப் பத்திரிகைகளின் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மக்களைக் கவரும் விதமானதும் ஊக்கமளிக்கக் கூடியதுமான சமூக நலத்திட்டங்களை செயற்படுத்தினால் அதற்கு எதிர்பார்க்கக் கூடிய அளவிலான ஆதரவு கிடைக்கும் என்பதற்கு இவற்றையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இத்தகைய செயற்திட்டங்கள் நாட்டின் சகல உள்ளூராட்சிச் சபைகளினாலும் முன்னெடுக்கப்படுமாயின், அதன்மூலம் ஒவ்வொரு கிராமங்களிலும் கழிவுகள் பெருகுவதைக் குறைக்கக்கூடிய நிலைமையை உருவாக்க முடியும்.

ஆனால் சாவகச்சேரி நகர சபையின் கீழ் காணப்படுவது போன்ற கழிவு வள நிலையம், தென்பகுதியில் இரு பிரதேச சபைகளுக்கு கீழுள்ள பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கழிவு வள நிலையங்களின் ஊடாகப் பிளாஸ்ரிக், பொலித்தீன் மட்டுமல்லாது புத்தகங்கள், கொப்பிகள் உள்ளிட்ட காகிதக் கழிவுகளையும் வழங்க முடி யும் என்பதால் இந்தத் திட்டத்தால் கூடுதல் நன்மைகளும் உள்ளன.

இவற்றைவிட வீதிகளில் வீசப்படும் பிளாஸ்டிக் போத்தல்களைப் பாதுகாப்பான முறையில் சேகரித்து மீள்சுழற்சிக்கு வழங்கும் நோக்கில்; கம்பியிலான சிறிய சேகரிப்பகம் ஒன்று வடமராட்சி, நெல்லியடி பஸ் நிலையம் அருகே அமைப்பொன்றின் முயற்சியால் கரவெட்டி பிரதேச சபையின் அனுசரணையுடன் வைக்கப்பட்டுள்ளது.

வீடுகளிலும், கிராமங்களிலும் கண்டபடி வீசப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றவும், மக்கள் கூடும் பொதுஇடங்களில், வீதி ஓரங்களில் வீசப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட கழிவுகளை பாதுகாப்பான இடத்தில் உபயோகமான முறையில் சேமிக்கவும் மேற்குறிப்பிட்ட இரண்டு செயற்திட்டங்களையும் சகல உள்ளூராட்சி சபைகளும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவற்றை முன்னு தாரணமாக்கி கழிவு வள நிலையம், போத்தல் சேமிப்பகம் என்பவற்றையோ அல்லது அதனையொத்த பாதுகாப்பிடத்தையோ அமைத்து கழிவு முகாமைத்துவத்தை வெற்றிகரமாக்க முயற்சி செய்யலாம். ஏனெனில் இது தொழில்நுட்பச் சிக்கலற்ற, நிதிச்சிக்கனம் கொண்ட செயன் முறைகளாக காணப்படுவதால் சாத்தியப்பாடு மிக்கதாகவும், சமுக மாற்றத்தை ஏற்படுத்தவல்லதுமானதாக காணப்படுகின்றது.

### சமூகப் பொறுப்பு

பிளாஸ்ரிக் கழிவு சுற்றுச் சூழலுக்கு பாதகமாக மாறுவதற்கு உள்ளூராட்சி சபைகளின் திட்டக்குறைபாடு மட்டுமல்ல பொதுமக்களின் சமூகப் பொறுப்பற்ற செயல்களுமே காரணமாகும். முகாமைத்துவச் செயற்திட்டங்கள் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருப்பதால் பெரும்பாலும் பொதுமக்கள் தங்களுடைய சமூகப் பொறுப்பை மறந்து விட்டு தன்னலமாகச் செயற்படவே முயற்சிக்கின்றனர். மக்கள் அவ்வாறு சமூக பொறுப்பற்றவர்களாக இருக்க முடியாது.

சமூகப் பொறுப்பின்மை ஒருகாலத்தில் அவர்களுக்கே தீங்கு ஏற்படுத்துவதாக ஆகிவிடும். அப்பாதக நிலைமை ஏற்படாதவண்ணம் ஒவ்வொரு பொதுமகனும் தத்தமது நகரம், தமது பிரதேசம், தாம் வாழுகின்ற கிராமம் என்ற நோக்கில் செயற்பட வேண்டும் 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற பாரதியின் கூற்றை மெய்பிக்கும் விதமாகப் பொது நலனுடன் செயற்பட்டு பிளாஸ்டிக்குகள், பொலித்தீன்கள் இல்லாத கிராமங்களை, பிரதேசங்களை, நகரங்களை மாற்றியமைக்க உதவுபவர்களாக மாற வேண்டும். ■



## வெளிநாட்டு தூதுவர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு.பெப்.23
இலங்கையில், வெளிநாட்டுத் தூது வர்களுக்கு கொவிட் 19 தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக் கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ராப் ஹய்டாரி, தான் தடுப்பூசி ஏற்றிக் கொண்டேன் என்று ருவிற் றரில் பதிவிட்டுள்ளார்.
இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் கோபால் பாக்லேயும் நேற்றுத் தடுப்பூசி ஏற்றிக் கொண் டார். இதேவேளை சுகாதார முன் னரங்கப் பணியாளர்களுக்கு முதல் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## சிறைக் கொத்தணி 4,775 ஆக அதிகரிப்பு!

கொழும்பு, பெப்.23
சிறைச்சாலைக் கைதிகள் 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதற்க மைய, சிறைச்சாலைக் கொத்தணி யில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 775 பேர்வரை அதிகரித்துள்ள தென சிறைச்சாலைத் திணைக்க ளம் தெரிவித்துள்ளது. இதுவரை யில் சிறைச்சாலைக் கொத்தணியில் அடையாளம் காணப்பட்டிருந்த 4 ஆயிரத்து 613 பேர் குணமடைந் துள்ளனர். இதற்கமைய, சிறைச் சாலைக் கொத்தணியில் தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட்ட 149 பேர் தற்போது மருத்துவமனை களில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-இ)

## மஹாபொல நிதியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, பெப்.23
மஹாபொல புலமைப்பரிசில் தொகையை 7ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் திட்டமி டப்பட்டுள்ளது. மஹாபொல நிதியில் 2020 2025ஆம் ஆண்டுக்கான மூலோபாய திட்டத்துக்கு அமைவாக எதிர்வரும் 5 ஆண்டு காலப்பகுதியில் தற்பொழுது வழங்கப்படும் புலமைப்பரிசில் எண்ணிக் கையை 30 வீதத்தால் அதிகரிக்கவும், புலமைப்பரிசில் தொகையை 25 வீதத் தால் அதாவது 7 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள் ளது. (வ-இ)

## விவசாய அமைச்சின் செயலாளர் ராஜினாமா

கொழும்பு.பெப்.23
விவசாய அமைச்சின் செயலாள ராகப் பதவி வகித்த, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, அந்தப் பதவியிலிருந்து விலகி யுள்ளார் என்று தெரிவிக்கப்ப டுகிறது.
தனிப்பட்ட காரணங்களால் அவர் கடந்த வாரம் பதவி விலகியுள் ளார்.
மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா கடந்த ஆண்டு மே மாதம் ஜனா திபதி கோத்தாபய ராஜபக்சவால் விவசாய அமைச்சின் செயலாள ராக நியமிக்கப்பட்டார்.
அவர் இலங்கை இராணுவத்தின் பிரதித் தலைமைத் தளபதியாகக் கடமையாற்றி இராணுவ சேவை யிலிருந்து ஓய்வுபெற்றவர்.
அவரது பதவி விலகல் தொடர் பில் தென்னிலங்கை ஊடக மொன்றுக்குக் கருத்துத் தெரிவித் துள்ள அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே, அமைச்சின் வேகத்துக்கு ஏற்றவகையில் அவரால் செயற்பட முடியவில்லை என்பதால் செயலாளர் பதவியில் இருந்து விலகுமாறு மேஜர் ஜென ரல் பெரேராவிடம் கேட்டுக் கொண் டோம். என்றார். (க-இ)

## வெள்ளைக் கிரவல் மூலம் வீதி சீரமைப்பு; வன்னேரிக்குளம் கி.அ. சங்கம் கொதிப்பு



வன்னேரிக்குளம், பெப்.23
எமது சூழலில் காணப்படுகின்ற சிவப்பு கிரவல் வெளிமாவட்டங் களுக்கும், தரமற்ற வெள்ளைக் கிரவல் எமது வீதிகளின் சீரமைப் புக்கும் பயன்படுத்துவது நியா யமா? என்று வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேள்வியெழுப்பியுள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
அக்கராயனில் இருந்து வன்னே ரிக்குளம் வழியாக ஜெயபுரம் நோக்கிச் செல்லும் வீதி 68 ஆண்டு களுக்குப் பின்னர் தற்போது நிரந்தரமாகச் சீரமைக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் எமது வீதி, தற்கா லிக சீரமைப்புகளின்போது எமது சூழலில் காணப்படுகின்ற சிவப்பு கிர வல் பயன்படுத்தப்பட்டது.
இது தரம் வாய்ந்த கிரவல் ஆகும். ஆனால் தற்போது வெள்ளைக் கிர வல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
இது தரமற்ற கிரவல் ஆகும். வன்னே ரிக்குளத்தின் முருகன் ஆலயத்தில் இருந்து பூநகரி ஜெயபுரம் வரையான வீதியில் தரமற்ற வெள்ளைக் கிரவல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
வெள்ளைக் கிரவல் பயன்படுத்தப்பட் டுள்ள இவ்வீதியில் வாகனங்கள் புதை கின்றன. இதற்குக் காரணம் வெள் ளைக் கிரவல் களித்தன்மை கொண்டி ருப்பதே. சிவப்பு கிரவலில் வாகனங் கள் புதைவதில்லை.
எமது சூழலில் காணப்படுகின்ற சிவப்பு கிரவல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படும் நிலையில், எமது கிராம வீதிக்கு தரமற்ற வெள்ளைக் கிரவ லைப் பயன்படுத்துவது நியாயமா?
இது தொடர்பாக மாவட்டத்தின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், கரைச்சி பிரதேச செயலா ளர் ஆகியோர் நேரடியாக வீதிச் சீர மைப்புக்களைப் பார்வையிட்டு தர மான வீதியை எமக்கு அமைத்துத் தரவேண்டும்- என்றனர். (ஜ-13)

## 24 மணிநேரத்தில் 22 விமான சேவை

கொழும்பு, பெப்.23
கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 22 விமான சேவைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதில் சுமார் ஆயிரத்து 504 பயணிகளுக்கு விமான சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.
இக் காலப்பகுதியில், 12 விமான சேவைகள் ஊடாக 943 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.
இதேநேரம், 10 விமான சேவைகள் மூலம் 561 பயணிகள் வெளிநாடுகளுக்கு சென் றுள்ளனர். (வ-இ)



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கி டையில் கடந்த வருடம் நடத்திய விளையாட் டுப் போட்டிகளில், வெற்றி பெற்ற வீர ,வீராங் கனைகள் மற்றும் கழகங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. (ந-9)

## மின்சார பாவனை நாட்டில் அதிகரிப்பு

தற்போது நிலவும் வறட்சி நிலைக்கு மத்தியில் நாட்டில் நாளாந்த மின்சாரத்துக்கான தேவை அதிகரித்துள்ளது. ஆனால் மின்சார விநியோ கத் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜெயவர்தன தெரி வித்துள்ளார். பெப்ரவரி மாத ஆரம்பம் முதல் தற்போதுவரை நாட்டின் மின்சாரத் தேவை அதிகரித்து வருகின்றது. பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு நாளாந்தம் அதிக ரிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஜன வரி மாத காலப்பகுதியில் பொதுமக்களின் மின்சாரத் தேவை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 20 சதவீத நீர்மின் உற்பத்தி மூலமும் 70 சதவீத அனல்மின் நிலை உற் பத்தி மூலமுமே தற்போது நாட்டின் மின் தேவை நிறைவேற்றப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ பெருந்தோட்டத்தை விற்கோம்

### இ.தொ.க.தெரிவிப்பு

பெருந்தோட்டங்கள் இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ விற் பனை செய்யப்படமாட்டாது என்று இ.தொ.காவின் நிதிச்செயலாள ரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இந்தியாவால் மலையகத்துக்கு 14 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட் டன. அந்த நாட்டின் உதவியுடன் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பாடசாலைகள் மேம்படுத்தப்பட்டன. தற்போது கொரோனாத் தடுப்பூசிகூட வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டங் களை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கும் எண்ணம் இல்லை. சீனாவுக்கு வழங்கப்படவுள்ளன எனவும் கூறுகின்றனர். அதற்கும் சாத்தியம் இருப்பதாகத் தோன்றவில்லை.
தற்போதைய கம்பனிகளால் தோட்டங்களை நிர்வகிக்க முடியா தென்றால், அவற்றை எமது மக்களுக்கே பகிர்ந்தளித்து, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்பதே காங்கிரஸின் நிலைப்பாடாகும்-என்றார். (க-இ)

## துப்புரவுப் பணியில் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு,பெப்.23
4 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ் சன் ராமநாயக்க, அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின் றன. அவர் அந்தப் பணிகளை உரிய முறையில் மேற்கொள்கிறார் என்று சிறைச் சாலை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
அத்துடன் மலசலகூடங்களையும் எவ்வித தயக்கமும் இன்றி அவர் கழுவுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அவர் விசேட கைதி என்பதனால் சிறைச் சாலைக்கு வெளியே பணிகளில் ஈடுபடுத் தப்படுவதில்லை என்றும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-இ)

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம் - வருகை நியமனம்

**உபவிடுதிக் காப்பாளர் : ஆண்**

* க.பொ.த. சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை. விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
* வயதெல்லை : 25 -50
* சம்பள அளவுத் திட்டம் : ரூபா 12,010-6x 250 + 14 x 280-17,430/-
* விசேட படி : ரூபா 6,000/- (மாதமொன்றுக்கு )

மேற்படி பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகள் 26.02. 2021 அன்று பி.ப 3.00 மணிக்கு உரிய சான்றிதழ்களோடும் சுயவிபரத்தோடும் நேரடியாக அலுவலகத்திற்கு வருகை தரவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
தொலைபேசி இல : 021 222 6525

லோ.துஷிகரன்
செயலாளர்.

# கண்ணீர்ப் பூக்கள்

எமது நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் **திரு. ப.க. பரமலிங்கம்** அவர்களின் பாசமிகு மகளான

**திருமதி ஜெயப்பிரபா குகானந்தன்**

அவர்களின் மறைவுத்துயர் அறிந்து அதிர்ச்சி அடைந்த நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் பாதக்கமலம் சேர மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.**
**நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதின பரம்பரைக்குரு**
**நயினை - சுதுமலை**

# நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாணம்
## பகிரங்க ஏல விற்பனை

எமது அமைச்சினால் பாவனையில் இருந்து விலக்கப்பட்ட வருடாந்த இருப்பெடுப்புச்சபையினால் ஏல விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள பாவிக் கப்பட்ட பொருட்கள் 2021.03.02ம் திகதி செவ்வாய் கிழமை மதியம் 12.00 மணியளவில் சமூக சேவை கள் திணைக்களத்தில் அமைந்துள்ள அமைச்சின் பாவனையில் உள்ள களஞ்சிய முன்றலில் ஏலத்தில் விடப்படவுள்ளது. ஏலத்தில் வாங்கப்படும் பொருட்கள் பெறுமதி செலுத்தப்பட்டு உடனடியாக வளாகத்தை விட்டு அகற்றப்படவேண்டும். ஏல விற்பனை செய்யப் படும் பொருட்களின் விபரம் எமது அமைச்சின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

ஆர். வரதீஸ்வரன்
செயலாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 03 . 1966



மறைவு 05 . 03 . 2020

**அமரர் இளைஜயா நந்தகுமாரன்**

வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம் – அப்பா
இருந்தும் மனம் ஏற்குதில்லை அப்பா
நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நந்திவளை பிள்ளையார் கோவிலடி
(கோ)ந்துவில் கிழக்கு, கொடிகாமம்.
077 133 6662

உங்கள் நினைவுகளுடன் என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்றைய நாளில் (23.02.2021) 75வது அகவையில் நுழையும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயற்திறன் மிகு செயற்குழு உறுப்பினரும், வலி தெற்கு பிரதேச சபையின் கௌரவ உப தவிசாளருமாகிய

**திரு. இராசையா பரமேஸ்வரலிங்கம்**

அவர்களை இந்நாளில் பேருவகையுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை**

# மழைக்கு சாத்தியம்

யாழ்ப்பாணம்,பெப்.23

காங்கேசந்துறையில் இருந்து திரு கோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஐ-இ)

## தேவை

* முழுநேர. பகுதிநேர உணவு பணியாளர் தேவை. (Restaurant Steward)
* இரவுநேர வரவேற்பாளர் தேவை. (Night Receptionist)
(முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

**Gnanams Hotel 0762220632, 0776309947**

# 1ம் ஆண்டு நினைவலைகள் 12ம் ஆண்டு நினைவலைகள்





தோற்றம் 18.12.1938 மறைவு 06.03.2020
**அமரர் நடுவிலார் திருநாவுக்கரசு**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)

தோற்றம் 15.09.1943 மறைவு 27.05.2009
**அமரர் திருநாவுக்கரசு திலகவதி**

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
மலர்ந்த எங்கள் அப்பா அம்மாவே
இன்னும் எல்லோர் மனதிலும் அணையாத சுடராய்
வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள்
நீங்கள் காட்டிய அன்பும் அரவணைப்பும் என்றும் மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆறுமுகம் வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.**

**உங்கள் நினைவில் குடும்பத்தினர்.**

# பெறுகை அறிவித்தல்.
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைநிதி - 2021

01. **தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** , (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **24.02.2021** திகதியிலிருந்து **10.03.2021** ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **24.02.2021** ம் திகதியிலிருந்து **10.03.2021** ம் திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/- (வரி நீங்கலாக)**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும், கேள்வி ஆவணத்தினை பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப்பதிவுச்சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்**, எனும் முகவரிக்கு **12.03.2021** ம் திகதி வெள்ளிக்கிழமை காலை **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 60 (அறுபது) நாட்கள் **(11.05.2021)** வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(10)/ Acc/Proc/Street Light-2021 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (LED-100Watts, 50Watts) | 2.0 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 50,000.00 | 08.06.2021 |

ப.மயூரன்
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.
23.02.2021

## பெயர் மாற்றம்

மணற்காடு பள்ளிக்குடா பூநகரி கிளிநொச்சியில் வசிக்கும் **பொன்னம்பலம் அன்னபூரணம்** ஆகிய நான் எனது பெயரை **பொன்னம்பலம் அன்னராணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பொன்னம் பலம் அன்னராணி** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**பொன்னம்பலம் அன்னராணி**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 07 . 1938



மறைவு
05 . 03 . 2020

எமது குடும்பத் தலைவர்

### அமரர் முருகேசு கிருஸ்ணர்

கண்ணீர் பிரளயத்தில் தவிக்க விட்டு
முதலாம் ஆண்டு ஆகிவிட்டது.
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்.


கடந்த 05.03.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் முருகேசு கிருஸ்ணர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் கிரியைகள் 23.02.2021 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**இன்ப நிழல்,
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
24 . 02 . 1959



இறப்பு
05 . 03 . 2020

### அமரர் செல்லையா சிவதாசன்

**(சன்லைற் றைக் கிளீனர்ஸ் முகாமையாளர்)**


ஆண்டு ஒன்று ஆனாலும் அனுதினம்
அணைத்தப்படியே உள்ள உம் நினைவுகள்
கருவினில் சுமக்கவில்லை
எம்மை கருவிழியாய் சுமந்தவர் நீங்கள்
காற்றுக் கூட காயப்படுத்தாமல்
எம்மை காத்தவர் நீங்கள்
எம் கனவுகளை நனவாக்கிடவே
ஓடியது உம் கால்கள்
எல்லோர்க்கும் ஏணிப்படியாய் நின்று
பலரின் எதிர்காலத்தை வளரச் செய்தீர்
உமக்கு ஈடு இணை இல்லை இந்த பிரபஞ்சத்தில்
பலகோடி ஆண்டுகள் சென்றாலும்
மாறாது ஐயா உம்மீது நாம் கொண்ட பாசம்
உயிர் மூச்சு உள்ள வரை
எமக்குள்ளே நீர் வாழ்வீர் எம் சாமியாய்.

**புங்கன்குளம் வீதி,
அரியாலை.**

**என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 05 . 1930



மறைவு
22 . 02 . 2021

### ஆறுமுகம் தளையசிங்கம்

(Retired servant of Paddy Marketing Department, Nanattan, **செல்வமுத்து மாரியம்மன் கோவில் ஆரம்பகால தர்மகர்த்தாவும், பூசகரும்**-Nanattan)

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தளையசிங்கம் 22.02.2021 திங்கட்கிழமை தனது 91வது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமி ஆறுமுகம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருகமனும், பொன்னுத்துரையின் மூத்த சகோதரரும், இராமச்சந்திரன், நாகம்மா, கமலம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தேவியின் உடன்பிறவா சகோதரரும், சுப்ரமணியம், வேதநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவரான இராஜக்கோன் (K.V.S Parm, Murungan), பிரபல சோதிடர் அழகேசன் (அம்மன் சோதிட நிலையம், இல.78, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்), இராஜேந்திரன் (India), மனோகரன் (Canada), மனோகரி (Swiss) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவஸ்ரீ பஞ்சலிங்கம், கலாவதி, சோபிதவாணி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையாரும், திலகவதி (திருநெல்வேலி), நந்ததாஸ் (Swiss), றிச்சோ (Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌதமன் (University College of Jaffna), கௌதமி (College of Technology, Diploma in ICT student), நிலாந்தன் (Swiss), நந்துஜா (Swiss), அரன் (Canada), அலிசியா (Canada), அனுசன் (Canada) ஆகியோரின் பாசமிகு பேரனும், சறோஜா, பத்மா, கருணா, திருச்செல்வம், சாந்தலிங்கம், சந்திரா, புனிதா, அம்பிகா, ராணி, சிவகுரு, பரமகுரு, ஈசன், கெங்கா, மணிமேகலை ஆகியோரின் பாசமிகு ஒன்றுவிட்ட சிறிய தந்தையும், நந்தினி (Canada), குமணன், தீபன் (Swiss), கஸ்தூரி, துளசி, கருணாகரன், இந்திராணி (Denmark), மோகனேஸ்வரி, காலஞ்சென்ற சிவாகரன் (Germany), திருக்குமரன், கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா தவமணி, கோபாலபிள்ளையும் அன்னலட்சுமியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு (78/3, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**78/3, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
075 040 7934 - த.அழகேசன்
076 096 9464 - அ. கௌதமன்**

**தகவல்:
த.அழகேசன் (மகன்)**

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி வடுகநாதன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி வடுகநாதன் நேற்று (22.02.2021) திங்கட்கிழமை உடுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,தாமோதரம்பிள்ளை செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை வடுகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புவனநாதன் மற்றும் வாசுதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், சிறிஸ்கந்தராசா, சகுந்தலாதேவி ஆகியோரின் மாமியும், திருப்பரன்-சுபாஜினி, காலஞ்சென்ற கோபிகன் மற்றும் சரண்யா-தினேஷ், பவித்திரா-கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாதுர்யன், பானுஜன், தீசிகன், தக்சன், தன்னியா, ரியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 172, மானிப்பாய் வீதி, உடுவிலில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் இன்று (23.02.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**172, மானிப்பாய் வீதி,
உடுவில்.
021 224 3172**

**தகவல்
குடும்பத்தினர்.**

## சிறுபான்மையினரின்....

வதற்கும், அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகளில் இடையூறுகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் ஐ.நா செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸ் உரையாற்றினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியைக் கையாளும் முறைமை தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்த மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் போன்றோர் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக ஜனநாயகக் கொள்கைகள் புறக்கணிக்கப்படுதல், தன்னிச்சையான கைது நடவடிக்கைகள், சிவில் சமூக இடைவெளி வரையறுக்கப்படுதல், சிவில் சமூக அமைப்புக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் சிறுபான்மையின சமூகத்தவர் மீதான மீறல்கள் உட்பட உலகளாவிய ரீதியில் மனித உரிமை மீறல்கள் வெகுவாக அதிகரித்து வருகின்றன.

### வைரஸ் தொற்றால் பாதிப்பு

மனித உரிமைகள் மிகவும் முக்கியமானவை. அவை எம்மை பிறருடன் சம அளவில் இணைக்கின்றன. மனித உரிமைகளே நாம் வாழ்வதற்கான வழியாகும். அதன்மூலமே தேவையற்ற பதற்றங்களைத் தணிக்க முடியும். உலகளாவிய ரீதியில் காணப்படும் மனித உரிமைகள் தொடர்பான சவால்களை முழுவீச்சில் கையாள்வதற்கான ஒரு கட்டமைப்பாக மனித உரிமைகள் சபை விளங்குகின்றது. கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் முழு உலகையும் தாக்கியது. எனினும் அந்தத் தொற்றுநோய் குடும்பங்களுக்கு இடையிலான தொடர்பையும், மனித உரிமைகளின் முழுமையான பரிமாணத்தையும் ஏற்படுத்தியது. அதேநேரம் இந்தத் தொற்றுநோய் பிரிவினைகள், இயலாமை, சமத்துவமின்மை மற்றும் மனித உரிமைகளில் தளர்வுகள் போன்ற புதிய சவால்களையும் தோற்றுவித்தது.

தொழில் இழப்பு, கடன் சுமை மற்றும் வருமான வீழ்ச்சி உட்பட பல்வேறு காரணங்களால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாலின சமத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மீண்டும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாமலும், வரையறுக்கப்பட்ட வளங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தடுப்பூசி ஏற்றுதலில் சமத்துவமின்மை அண்மையில் அவதானிக்கப்பட்ட விடயமாகும். உலகளாவிய ரீதியில் சுமார் 130 நாடுகளுக்கு இன்னமும் தடுப்பு மருந்துகள் எவையும் கிடைக்கவில்லை. தடுப்பூசி ஏற்றுவதில் சமத்துவம் பேணப்படுவது மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்தும். ஆனால் தடுப்பூசி ஏற்றுதலில் கடைப்பிடிக்கப்படும் தேசியவாதம் அதற்கு ஒத்துழைக்க மறுக்கின்றது. கொவிட்-19 தடுப்பூசி உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் பொதுவானதாகவும், அனைவராலும் கொள்வனவு செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுவதற்காக விதிக்கப்பட்ட வரையறைகள் தேர்தல் நடைமுறைகளை மட்டுப்படுத்துவதற்கும், எதிர்த்தரப்புகளின் குரல்களை பலவீனப்படுத்துவதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

### சிறுபான்மைக்கு அச்சுறுத்தல்

தற்போது அடிப்படைவாதம், அடக்குமுறைக்கு உள்ளாக்குதல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவை உட்பட அனைத்தும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். உலகளாவிய ரீதியில் சிறுபான்மை சமூகங்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு சமூகத்தின் பல்வகைத் தன்மைக்குக் காரணமாக அமைவது சிறுபான்மை சமூகங்களேயாகும். அனைத்து சமூகங்களினதும், மத மற்றும் பாரம்பரிய ரீதியிலான அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும், உரிமைகளை மதிப்பளிப்பதற்கும் ஏற்ற வகையிலான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். என்றார்.

(எ-இ)

---

# சௌள உபநயன பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான சார்வரி வருடம் மாசித்திங்கள் 12ம் நாள் (24.02.2021) புதன்கிழமை புனர்பூச நட்சத்திரமும் பூர்வபக்ஷ துவாதசி திதியும் சித்த யோகமும் கூடிய முற்பகல் 10.00 மணி 45 நிமிடம் முதல் 11.15 மணி வரைக்கும் அமைந்த இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்.

| | |
|---|---|
| காசிப கோத்திரம் | காசிப கோத்திரம் |
| **ஸ்வர்க்கிய ஸ்ரீ மு.நாகேந்திர சர்மா** | **சிவஸ்ரீ இ.மகாலிங்கக் குருக்கள்** |
| **மனோன்மணி அம்மா** | **மதிவதனி** தம்பதியரின் |
| தம்பதியரின் பௌத்திரனும் | தௌஹித்திரனும் |

எமது சிரேஷ்ட புத்திரனுமான

## சிரஞ்ஜீவி பிரத்யுண்ண சர்மாவுக்கு


சௌள உபநயன பிரம்மோபதேச செய்ய இறை அருளும், குருவருளும், அந்தணப் பெரியோரின் நல்லாசிகளும் கூடியிருப்பதால் மேற்படி வைபவம் மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் தேவஸ்தான மண்டபத்தில் நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமாரனை ஆசிர்வதித்து விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நா.கிருபாகரக் குருக்கள்**
**குடும்பத்தினர்.**

---

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 09 . 07 . 1934



**மறைவு** 21 . 02 . 2021

## கபிரியேல் செபஸ்ரியாம்பிள்ளை (செட்டி)

கடற்படையின் முன்னாள் பொறியியலாளரும்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்டின் முன்னாள் கட்டடக்கலை ஆசானும்.

இல. 53, இராஜேந்திரா வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் செபஸ்ரியாம்பிள்ளை (செட்டி) 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல் றோசமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வெள்ளை தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னப்பிள்ளை இராசாத்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெர்ணான்டோ (மானிப்பாய் மெமோரியல் கொலிச் அதிபர்), காலஞ்சென்ற மோசேஸ், பிரான்சிஸ் தியாகு ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலினி (சுவிஸ்), ஜேந்திரன், அன்ரன் (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி, சுகந்தி (சுவிஸ்), ஜெயந்தி, தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் (குட்டி-சுவிஸ்) பரமேஸ்வரி, ராணி (சுவிஸ்), பகிரதன் (சுவிஸ்), சசிகரன், நிச்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், அருள், ரூபினி, அஜித் (சுவிஸ்), மெனிற்றா (பிரான்ஸ்), டன்சி, முகுந்தன் (பிரான்ஸ்), றோய், ஸ்ரலின் (மலேசியா), லௌரி (சுவிஸ்), ஸ்ரேபான் (பிரான்ஸ்), நிசா (சுவிஸ்), றொபேர்ட், றொய்சன், றொசான் (சுவிஸ்), ஒலின்ரன், ஒலின்ரினா, கமில்ரன், அலன்ரினா, கரன்சியா, நிலோஜன், நிருஜன், நிலக்சன், டிலக்ஷிகா, நிரோஜினி (சுவிஸ்), பியஸ்காந்த் (சுவிஸ்), மொழி (சுவிஸ்), ரவி (பிரான்ஸ்), அகிலன் (மலேசியா), ஜங்கரன் (சுவிஸ்), திவ்யா (பிரான்ஸ்), சாள்ஸ் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், டினுசன் (பிரான்ஸ்), அக்ஷா (சுவிஸ்), டிலான் (பிரான்ஸ்), அகிஷா (சுவிஸ்), கிறிஸ்ரிகா, டபினா, ஆரோண், ஷருண் (சுவிஸ்), மேரி பிறிசா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது இன்று (23.02.2021) பி.ப 2.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் இறுதிக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## (22) விற்பனைக்கு (22)

யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்பு காணியும் வீடும், யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் கலாசாலை வீதியில் 10 பரப்பு காணியும், யாழ் சிவப்பிரகாசம் வீதியில் 10 பரப்பு காணியும் வீடும், யாழ் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும், யாழ் நல்லூருக்கு அண்மையில் கோயில் வீதியில் 4 பரப்புக் காணியும், யாழ் K.K.S வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும் வீடும், யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் 6 பரப்புக் காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 15 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும், 15 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

---

## தவறிவிட்டது

கதிரவேலு பாலேஸ்வரன் 780014865V என்னும் இலக்கமுடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ATM Card அடங்கிய பணப்பை நல்லூர் கொமர்சல் ATM நிலையத்திற்கும் நல்லூர் கோயிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். **077 605 1376**

---

# மரண அறிவித்தல்



## கோவிந்தபிள்ளை சிவப்பிரகாசம்
**(ஆயுர் வேத வைத்தியர்)**

அராலிவீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை சிவப்பிரகாசம், நேற்று (22.02.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை நாகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சசியின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும், செந்தில் அனந்தன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகமணி, மற்றும் தேவராசா, ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருள்ராம் (ஜேர்மனி), அனுரங்கன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (22.02.2021) திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி வீதி,**
**சங்கானை.**
**076 162 1212**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## யாழ்.மருத்துவ...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் கொழும்புக்கு கடந்த வாரம் சென்று வந்துள்ளார். அதன்பின்னர் சத்திர சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளார். சில நாள்களின் பின்னர் அவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து தாமாக முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுள்ளார்.

இவருடன் தொடர்பைப் பேணியவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போதனா மருத்துவனையில் இவருடன் தொடர்பைப் பேணியவர்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றது என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ நிபுணர் சத்திர சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளார். ஏனைய மருத்துவர்கள், தாதியர்களுடனும் தொடர்பைப் பேணியுள்ளார். அதனால் அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் நேற்று மொத்தமாக 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியாலையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக சமூகத்துக்குள் இருந்து தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். அதையடுத்து கொரோனா பரவல் சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளதா என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள்ளது. (எ-இ)

## அடுத்த...

சிறிபவனாந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை நரம்பியல் நிபுணர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. அவர் கடந்தவாரம் கொழும்பு சென்று வந்திருந்தநிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ நிபுணருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து போதனா மருத்துவமனையில் நேற்றிரவு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கூடி ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் சிறிபவனாந்தராஜா, மருத்துவ நிபுணருக்கு கொறொனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமைக்காக எவரும் அச்சமடையத் தேவையில்லை. மருத்துவமனையில் உரிய சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்று கூறினார்.

தொற்றுக்குள்ளான மருத்துவ நிபுணர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மருத்துவமனையின் செயற்பாடுகள் அனைத்தும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக எந்தவிதமான இடையூறுகளும் இன்றி நடக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் நோயாளிகளைப் பார்வையிடுவது தொடர்பில் சுகாதார அமைச்சால் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றியே மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. என்றார்.

அதேவேளை, கடந்த வாரம் கொழும்பு சென்று திரும்பிய மருத்துவ நிபுணர் அதன்பின்னர் அவர் சத்திர சிகிச்சைகளில் பங்கேற்றிருந்தார் என்றும், போதனா மருத்துவமனையில் கடமைக்குச் சமூகமளித்திருந்தார் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து அவர் தாமாக முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டிருந்தார். (எ-26)

## மேலதிக...

யில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் தனிமைப்படுத்தல் என்பன முன்னெடுக்கப்படும் என்றும் தெரிகின்றது. இதனை நிர்வாகத்தால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு கையாளவுள்ளது.

மருத்துவமனை விடுதிகளுக்கு தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தொற்றாளருடன் தொடர்புகளைப் பேணியோரை இனங்காணும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (எ)

## பல நாடுகள்...

என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த நல்லாட்சி அரசு, ஜெனிவாவில் இலங்கையை அடகு வைத்திருந்தது. இலங்கை மக்களின் அமோக ஆதரவுடன் எமது புதிய ஆட்சியில் நாட்டை மீட்டெடுத்து விட்டோம். நாட்டின் இறைமையை மீறி மக்களின் ஆணையை மீறி நாட்டுக்கு எதிராக எந்தப் பிரேரணைகளையும் முன்வைக்க முடியாது.

அதை மீறி முன்வைக்கப்படும் பிரேரணைகள் பயனற்றவையாகவே போய்விடும். நாம் எவருக்கும் அஞ்சவில்லை. ஜெனிவா விவகாரமும் இலங்கைக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது. பல நாடுகள் இம்முறை இலங்கைக்கு ஆதரவு வழங்கும். எமது நாட்டின் நிலைப்பாடுகளை ஜெனிவா அமர்வில் வெளிவிவகார அமைச்சர் தெளிவாக எடுத்துரைப்பார்- என்றார். (எ-22)

## தமிழ்க் கட்சிகளின்...

ஈடுபட்டுள்ளனர். ஆனால், இந்த நடவடிக்கைகள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டாது. நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவா சவாலை நாம் முறியடித்தே தீருவோம். புதிய பிரேரணையையும் வலுவிழக்கச் செய்வோம்.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடர் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் ஒன்றும் நடைபெறவுள்ள நிலையில், புதிய பிரேரணை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை நேற்று ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சகல உறுப்பு நாடுகளுக்கும், இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரி கடிதங்கள் அனுப்பியுள்ளேன். எமது நட்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வழங்கும் என்பதில் உறுதியான நம்பிக்கையில் இருக்கின்றோம். புதிய பிரேரணை ஊடாக எந்தத் தரப்பும் எமக்குச் சவால் விட முடியாது. அந்தப் பிரேரணை ஒன்றில் தோல்வியடையும் அல்லது வலுவிழந்து போகும். எமது நட்பு நாடுகள் இலங்கையை ஒருபோதும் காட்டிக்கொடுக்காது. ஆனால், எமது நாட்டிலுள்ள தமிழ்க் கட்சியினர் உள்ளிட்ட எதிரணியினர் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோக நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால், இந்த நடவடிக்கைகள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டாது. நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவா சவாலை நாம் முறியடித்தே தீருவோம். எமது நாடு இறைமை உள்ள நாடு என்பதை நாட்டுக்கு எதிராகத் துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்ள வேண்டும்-என்றார். (எ-22)

## ஐ.நாவில்...

கள் சபைக் கூட்டத்தொடரில் பிரிட்டன் சமர்ப்பித்த பொது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரத்தை ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு அப்பால் பொறுப்புக்கூறும் அமைப்பு ஒன்றிடம் கையளிக்க வேண்டும் என்று தமிழர் தரப்பால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்த விடயம் கையாளப்படவுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக இந்தக் கூட்டத்தொடர் இணையவழிக் காணொலித் தொழில்நுட்பம் ஊடாக நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத் தொடரில் நேற்று ஐ.நா. பொதுச் செயலர் அன்டொனியோ குட்ரெஸ் உரையாற்றினார். உலகெங்கும் உள்ள சிறுபான்மை மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என்று அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இன்று மாலை காணொலித் தொழில்நுட்பம் ஊடாக உரையாற்றவுள்ளார். (எ-இ)

## ஐ.நா.மனித...

அமைப்பின் உறுப்பினர் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் போலியானவை. உரிய சாட்சியங்கள் இன்றி, கற்பனையின் அடிப்படையில் அவை முன்வைக்கப்படுகின்றன. அதனால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து இலங்கை விலக வேண்டும் என்று கோருகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா வெளியேறியது. அந்த நாட்டால் முடியுமென்றால் ஏன் இலங்கையால் முடியாது. எமது யோசனை தொடர்பாக அரசு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும். போலியான குற்றச்சாட்டுக்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை. என்றார். (எ-44)

## வடக்கிலுள்ள...

தார். யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளைப் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்காக சீன நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கு கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ள இந்தியா, மின்சக்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதியுதவியை கொடையாக வழங்க முன்வந்ததுடன், இந்தத் திட்டத்தை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரியிருந்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு மின்பிறப்பாக்கி மூலம் குறிப்பிட்ட சில மணிநேரங்களுக்கே மின்சாரம் கிடைக்கிறது. எனவே தான் சூரிய சக்தி, காற்று ஆகியவற்றின் மூலம் மின்சார வசதியை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் சர்வதேச விலைமனுகோரலுடன் தொடர்புபட்டுள்ளது என்றபோதும் எந்தவொரு நாட்டுக்கும் தீவுகள் விற்பனை செய்யும் திட்டம் இல்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து 12 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டிருந்தது. விலைமனுக்கோரலின் பின்னர் இந்தியத் தூதுவர் என்னுடன் கதைத்தார்.

இந்தத் திட்டத்துக்கான 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொடையாக வழங்குவதற்கு இந்தியா விரும்புகின்றது என்ற விடயத்தை தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

விலைமனுக் கோரல் முடிவுபெற்றுள்ளது. திறைசேரியின் கண்காணிப்பு அறிக்கை வரவுள்ளது. மறுபுறத்தில் இந்தியாவும் யோசனை முன்வைத்துள்ளது. நாம் மக்களின் பக்கம் நின்று முடிவெடுப்போம். எந்தவொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்காகவும், எமது நாட்டு நிகழ்ச்சி நிரலை நாம் அடிபணிய வைக்கமாட்டோம். என்றார். (ற-44)

## ஆசிரியைக்கு...


பட்ட ஒருவர் ஆசிரியை என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, தனங்கிளப்பைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கு, கடந்தவாரம் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. மன்னாரில் இருந்து வந்த பஸ்ஸில் பயணித்தவர்களுக்கு சங்குப்பிட்டிப் பாலம் அருகே எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.


இந்த ஆசிரியை பூநகரிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிப்பவர். அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் ஒரு ஆசிரியைக்கே நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## லகிருவுக்கு கொரோனா; பதில் வீரராக லக்மல்!

கொழும்பு, பெப். 23
மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள நிலையில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லகிரு குமாரவுக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திரிமன்னேவுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு அவர் அதிலிருந்து குணமடைந்து வரும் நிலையில் தற்போது லகிரு குமாரவும் தொற்றுக்கு உட்பட்டுள்ளார். இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் இலங்கை அணியில் லக்மல் புதிதாக இணைக்கப்பட்டுள்ளார். (ம)








முதலாவது ரி20 ஆட்டம்

# ஆஸ்திரேலியாவுக்கு நியூசி. பலத்த அடி!

**வெலிங்டன், பெப். 23**
**ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் 53 ஓட்டங்களால் வெற்றிபெற்றது நியூசிலாந்து அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆனால் நியூசிலாந்து அணியின் ஆரம்பம் பலமாக அமையவில்லை. குப்தில் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். ஷெய்பெட் ஓர் ஓட்டத்துடனும் வில்லியம்சன் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஒரு கட்டத்தில் நியூசிலாந்து அணி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் கொன்வெ அதிரடியாக விளையாடி அணியைச் சரிவில் இருந்து மீட்டார். அவருக்கு பிலிப்ஸ் (30 ஓட்டங்கள்), நிஷம் (26 ஓட்டங்கள்) இருவரும் பக்கபலமாக உதவினர். முடிவில் நியூசிலாந்து அணி 5 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைக் குவித்தது. கொன்வெ ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 131 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 53 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மிச்செல் மார்ஷ் பெற்ற 53 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் சொட்கி 4 இலக்குகளையும், சவுத்தி, போல்ட் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஜெமிசன், சான்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

நெல்லியடி திக்கம் வீதியில் வதிரிச் சந்தியிலிருந்து 300 m தூரத்தில் பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**077 392 7815**

**வேலையாள்கள் தேவை**

1). AD சாரதி அனுமதிப் பத்திரம் உடைய 35-50 வயதிற்கு இடைப்பட்ட மும்மொழிகளும் தெரிந்த சாரதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (துங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது)
2). கணக்காளர், ரைப்பிங், Graphic Design தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பிற மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். தொடர்பு:

**077 3545 115, 077 7474 111**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 12 . 1962



மறைவு 22 . 02 . 2021

திருமதி
**யோகலிங்கம் சாந்தாதேவி**

16/4, 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட யோ.சாந்தாதேவி நேற்று (22.02.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா அமிர்தம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோகலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், சாமினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். பிரதேச செயலகம்), துஷியந்தன் (ரவி), ஆகியோரின் தாயாரும், சந்திரகுமார், அரசி ஆகியோரின் மாமியாரும், கஜிபா, சுஜிபா, அக்ஷரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/4, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
077 413 5395
077 476 6752
077 751 3059

தகவல்
குடும்பத்தினர்.


# திடீரென விலகினார் வாஸ்

கொழும்பு, பெப்.23
இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸ் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட அவர் இலங்கை கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகள் நோக்கிப் பயணமாவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார் என்று தெரிகின்றது.

இது தொடர்பில் தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள சமிந்த வாஸ், தாழ்மையான கோரிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திடம் முன்வைத்தேன். எனினும் அந்த கோரிக்கை நிராகரிக்க ப்பட்டது. இதைத் தவிர வேறு எதையும் கூறமுடியாது. "நீதி வெல்லும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமிந்தவாஸ் பதவி விலகியுள்ள நிலையில் இலங்கை இருபது 20 கிரிக்கெட் குழாம் வேகப்பந்து பயிற்றுவிப்பாளர் இன்றி இந்தத் தொடரில் பங்கேற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (எ-319)



Chaminda Vaas @chaminda_vaas · 2h
I made a humble request to SLC and they turned it down.
That's all I can say at the moment.
Justice will prevail!



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.